# செம்பதாகை

மலர்: 5
இதழ்: 11 - 12
1983
கார்த். - மார்கழி
விலை ரூபா 1-50
புரட்சிகர வெகுஜன ஏடு


# நீதியான சமரசத் தீர்வுக்கு முன்வரல் வேண்டும்!

## தீவிர இனவாதிகளுக்கு அடிபணியக்கூடாது!!

**கடந்த காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு காணத் தவறியதன் காரணமாகவே நாடு இன்று ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. சமரசத் தீர்வுக்கான இன்றைய சூழ்நிலையை தீவிர இனவாதிகளுக்கு அடிபணிந்து கை நழுவவிடக்கூடாது என்பதையே நாம் வற்புறுத்துகின்றோம்.**

இலங்கைத் தமிழர் பிரச்சினை இன்றும் பழைய நிலையில்தான் இருக்கின்றது என்று சிலர் நினைக்கிறார்கள். உண்மை அப்படி அல்ல. தேசிய-சர்வதேசிய ரீதியிலான அதன் அளவிலும், குணத்திலும் பெரும் மாற்றத்தைப் பெற்றுள்ளது. எனிமேலும் கடந்த காலத்தைப்போல் தமிழர் பிரச்சினையைத் தட்டிக்கழித்து விடமுடியாது. அல்லது இழுத்தடித்து ஏமாற்றத்திற்கு உள்ளாக்கி விடக்கூடிய நிலையிலும் அது இல்லை. இதை தீவிர இனவாதிகளும், பதவி வெறி கொண்டோரும் மறுக்கலாம். ஆனால் தேசத்தின் சுதந்திரம், இறமை, தன்னாதிக்கம் என்பனவற்றின் மீது உண்மையான அக்கறை கொண்ட ஒரு பொறுப்புள்ள அரசாங்கத்தின் தலைவர்களும்-மக்களின் எதிர்கால நல்வாழ்வில் சிரத்தையுடைய ஏனைய அரசியல் சக்திகளும் யதார்த்த நிலைமைகளைக் கண்டு கொள்ள மறுத்துவிடக் கூடாது. அவ்வாறின்றி வளர்ந்துள்ள சூழ்நிலைகளை கண்டு கொள்ள மறுத்தால் வரலாற்றில் இதுவரை இழைக்காத மாபெரும் தவறு ஒன்றை இழைத்தமைக்காக நிச்சயம் வருந்த வேண்டிய நிலையே ஏற்படும். ஏனெனில் நாம் தேசியரீதியில் பேரினவாத பிற்போக்கு சக்திகளினதும், சர்வதேச ரீதியில் பெரும் வல்லரசு மேலாதிக்கவாத சக்திகளினதும் கருமேகங்களால் சூழப்பட்டிருக்கின்றோம் என்ற அபாயத்தை உணர்ந்து கொள்வது மிகமிக அவசியமாகும்.

நடந்து முடிந்த பேரினவாத வெறியாட்டத்தின் மூலம் ஏற்பட்ட இழப்புகளிலும், துன்ப வேதனைகளிலும் இருந்து தமிழ்மக்கள் இன்னும் விடுபடவில்லை. நாட்டின் பல பகுதிகளில் பயப்பீதியும், பதட்டமும் காணப்படுகின்றது. தீவிர இனவெறியர்களைத் தவிர்ந்த சிங்கள மக்களும், தமிழ்-முஸ்லீம் மக்களும் இவ்விதநிலை நீடிப்பதை எவ்வகையிலும் விரும்பவில்லை. அவர்கள் எல்லோரும் ஒரு சமரசத் தீர்வு ஏற்பட்டு உள்நாட்டு வெளிநாட்டு அபாயம் இன்றி நிம்மதியாக வாழவே விரும்புகிறார்கள்.

நாட்டில் நவகாலனித்துவப் பொருளாதாரச் சுரண்டலினாலும், அதைப் பாதுகாக்கும் பெருமுதலாளித்துவ யூ. என். பின் நடவடிக்கையாலும் மக்கள் பெரிதும் டாதிக்கப்பட்டுள்ளனர். இனவாதம் ஒரு புறத்தில் தூண்டப்படும் அதேவேளை, சகல மக்களிடமும் புனருத்தாரண நிதி வசூலிக்கும் அரசின் நடவடிக்கை அதன் உண்மையான ரூபத்தை மக்களுக்கு தெளிவாக்குகின்றது. ஆதலால் நாட்டின் பெரும்பான்மையான மக்களது போராட்டம் அன்றாட வாழ்க்கைப் போராட்டமாகவே இருக்கின்றது. அத்தகைய மக்கள் ஒரு நாளைக்குத்தானும் இனவாத வன்செயல்கள் இடம்பெறுவதை விரும்பவில்லை. இனவாத வன்செயல்கள் ஒரு பேரினவாத அரசின் செயலாக இருப்பதால், அதை மேவி முறியடிக்கும் சக்தி தற்போது மக்களிடம் இல்லாதிருக்கின்றது. அப்படி இருந்தும் இனவாதவெறியாட்டங்களில் இருந்து தங்களால் முடிந்தளவிற்கு சிங்கள, முஸ்லீம் மக்கள் தமிழ் மக்களைப் பாது

(8-ம் பக்கம் பார்க்க)

## தேங்காயும் வாக்குறுதியும்

1977ம் ஆண்டு யூ. என். பியின் தேர்தல் மேடைகளில் இரண்டு பாதித்தேங்காய்கள் பிரசாரக் கருவிகளாக இருந்தன. ஒரு பாதியைக் காட்டி இதன் விலை 35 சதம் என்றும் மறுபாதியைக் காட்டி இதுவும் 35 சதம் தான். எனவே ஒரு தேங்காய் 70 சதமாக விற்பனை செய்யப்படுகின்றது. நாங்கள் பதவிக்கு வந்தால் ஒரு தேங்காயை 35 சதத்திற்கே வழங்குவோம் என்று வாக்குறுதியளித்தே பதவிக்கு வந்தார்கள். இன்று யூ. என். பி பதவிக்கு வந்து ஆறு வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஒரு தேங்காயின் இன்றைய சராசரி விலை ரூபா 7 ஆகும். தேங்காய் விலை எங்கே? யூ. என். பி. யின் வாக்குறுதி எங்கே?

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் இல்லை

கடந்த 77ம் ஆண்டில் யூ. என். பி ஆட்சி பதவிக்கு வந்த காலம் முதல் இன்று வரை பல்வேறு விதமான பாதிப்புகளுக்கு மக்கள் ஆளாக்கப் பட்டுள்ளார்கள். உயிர், உடமைகள், இருப்பிடம், உடல் ஊனங்கள், வேலை இழப்பு, கல்விச்சீரழிவு போன்ற குறிப்பான அம்சங்களில் மக்கள் மிகப் பெரிய இழப்புகளையும் பாதிப்புக்களையும் பெற்றிருக்கிறார்கள்.

1977ல் நாடு தழுவிய இனக்கலவரம், 1978ல் கிழக்கு மாகாணத்தில் சூறாவளி-வெள்ளம், 1979ல் இரத்தினபுரி பிரதேசத்தில் இனவாத வன்செயல், 1980ல் பொது வேலை நிறுத்தம், 1981ல் வடபகுதி எரிக்கப்பட்டமை, 1982ல் ஜனாதிபதி—சர்வசன வாக்கெடுப்புக்கான தேர்தல்களின் போது வன்செயல்கள் இடம்பெற்றமை, 1983ல் நாடு தழுவிய இனக்கொலை வெறியாட்டம்.

இவற்றை நாம் அட்டவணைப் படுத்தி கூறுவது ஏனெனில் இத்தனை சம்பவங்களிலும் தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் பல்லாயிரக் கணக்கில் பாதிக்கப்பட்டுள்ளமையைச் சுட்டிக் காட்டவேயாகும். இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைத்த நிவாரணம் மக்களைப்பொறுத்தவரை எதுவித பலனையும் கொடுக்கவில்லை. அரசியல் லாபம், ஊழல், மோசடி, விரயம், புறக்கணிப்பு, பழிவாங்கல் போன்றன முதன்மை பெற்றனவே அன்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் கிட்டவே இல்லை. ஒவ்வொரு தடவையும் பாதிப்புக்கள் ஏற்பட்டவுடன் நிவாரணம் பற்றிய பெரும் பிரசாரங்கள் இடம்பெற்றனவே தவிர சிறிது காலம் செல்ல யாவும் மறக்கப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. வசதி படைத்தவர்களும், உயர்மட்ட செல்வாக்குப் பெற்றவர்களும் பாதிப்புகளுக்கு மேலால் நிவாரணம் பெற்றிருக்கக்கூடும். ஆனால் உண்மையான பாதிப்படைந்த சாதாரண மக்கள் நிவாரணத்தைப் பெறவோ அதன்மூலம் தம் வாழ்வை புனரமைத்துக் கொள்ளவோ முடியவில்லை. கிழக்கில் சூறாவளி ஏற்படுத்திய அழிவுக்கு என ஜனாதிபதி நிதி உருவாக்கப் பட்டது. பாதிப்புக்கு உள்ளான மக்களுக்கு அது எவ்வளவிற்கு உதவியது. அதேபோல் புனருத்தாரண நிதியும் உண்மையான பாதிப்படைந்தவர்களுக்கு உதவுமா என்பது பொறுத்திருந்தே பார்க்க வேண்டிய தொன்றாகும். சாதாரண மக்களின் அன்றாட வாழ்வில் உண்மையான அக்கறை கொண்ட ஒரு அரசிடம் மட்டுமே பாதிப்புக்கேற்ற நிவாரணத்தை எதிர்பார்க்க முடியும். உயர்வர்க்க ஆட்சி அந்த வர்க்கத்தாருக்கு உதவக்கூடியது என்பது உண்மை அல்லவா?

**உள்ளே**

பேராசிரியர்

**கைலாசபதியின்**

முதலாண்டு நினைவாக கட்டுரை இடம்பெறுகிறது.

# தேசியப் பத்திரிகைகளின் விஷமத்தனம்

தேசியப் பத்திரிகைகள் என்ற பெயரில் வெளிவரும் நம்நாட்டுப் பத்திரிகைகளில் அநேகமானவை அதற்குரிய உண்மையான அர்த்தத்தைக் கொண்டிருப்பதில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் நம்நாட்டில் தேசநலன், மக்கள் சகலரினதும் நலன் என்பவற்றை பாதுகாக்கும் நோக்குடன் இத் 'தேசியப்' பத்திரிகைகள் செயற்படுவதில்லை. அதற்குப் பதிலாக பிரச்சினைகளை பெரிதாக்கி அதை இனவாத விஷமத்தனமாக்குவதிலேயே எப்பொழுதும் கவனமாக இருந்து வந்துள்ளன.

''பத்திரிகையில் என்ன பொய்யே எழுதியிருக்கு'' என்றவிதமான மக்களின் பாமரத்தனத்தை இப்பத்திரிகைகள் நன்குபயன்படுத்தி வந்துள்ளன. இலங்கையில் இனவாத வன்செயல்கள், மோதல்களுக்கு எப்பொழுதும் இத் 'தேசியப்' பத்திரிகைகளின் பங்கு எவ்வகையிலும் குறைந்ததல்ல. இன்றும் ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படுவதை விரும்பாத சில பத்திரிகைகள் அடிக்கடி இனவாத விஷமத்தனங்களைப் பரப்பி வருகின்றன.

தேசியப் பத்திரிகைகள் என்று கூறும் இவை ஏன்

(8-ம் பக்கம் பார்க்க)

# சம்பவங்களும் அதன் போக்குகளும்

அவதானி

## அதிகௌரவ குண்டர் அவர்கள்!

பாராளுமன்ற அரசியலில் காடைத்தனத்தின் முக்கியத்துவம் மூன்றுமுலகநாடுகளில் ஒருபகிரங்கமான விஷயம். காடைத்தனத்தின் அளவும் பாதிப்பும் நாட்டுக்கு நாடு வேறுபட்டாலும் கூட மூன்றுமுலக நாடுகளில் எங்கெங்கு பூர்ஷுவா ஜனநாயக முறை இருக்கிறதோ அங்கெல்லாம் அதிகாரவர்க்கம் ஜனநாயக உரிமைகளை மறுக்கவும் எதிர்க்கட்சிகளை நசுக்கவும் பாராளுமன்றப் பெரும்பான்மை பலத்தைவிடக் காடைத்தனத்தையே கூட நம்புகின்றனர். அரசாங்கத்தின் அரசியல் நெருக்கடியும் நாட்டின் பொருளாதார நெருக்கடியும் உக்கிரமடையும்போது காடைத்தனமும் துரிதமாக அதிகரிக்கிறது. ராணுவ ஆட்சிகளின் ராணுவத்தின் மூலம் மக்கள் ஒடுக்கப்படும்போது ஒடுக்கல் மிகத் திறமையாகவே நடந்தாலும் ராணுவம் நேரடியாகவே அரசின் கரமாகக் காணப்படுவதால் மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக அணிதிரள்வது ஒருவகையில் எளிதாகிவிடுகிறது. காடைத்தனத்தின் விஷயத்தில் அவ்வாறான பிரச்சனை கிடையாது. அரசாங்கமே தன் காடைத்தனத்தைக் கண்டனம் செய்யவும் அது எதிர்க்கட்சியாளர்களது செயல் என்று குற்றஞ்சாட்டவும் மக்கள் மத்தியில் குழப்பமான சூழ்நிலைகளைச் சிருஷ்டிக்கவும் காடைத்தனம் மிகவும் வசதியானதொரு உபகரணம். ராணுவ—பொலிஸ் அத்துமீறல்கள் போலன்றி அரசாங்கக் காடைத்தனம், ஜனநாயக ஆட்சி, நீதி நிர்வாகம், சட்டத்திற்கு மதிப்பு போன்றவற்றைப்பற்றி அரசாங்கம் பெருமைப்பட்டுக்கொள்ள எவ்வகையிலும் தடையாக இராது. மொத்தமாகச்சொன்னால் 'ஜனநாயகத்துக்கு ஜனநாயகமுமாயிற்று; அடக்குமுறைக்கு அடக்குமுறையுமாயிற்று' என்று திருப்திப்பட்டுக்கொள்ளக்கூடிய வசதியை அது அரசாங்கத்துக்கு வழங்குகிறது. தேர்தல்களின் போது காடைத்தனம் என்பது நம்மக்கள் பழக்கப்பட்டுவிட்ட ஒன்று. கூட்டம் குழப்பல், வழிமறிப்பு கலவரங்களை ஏற்படுத்தல் பயமுறுத்தல்கள் போன்றவை நீண்டகாலமாகவே மெல்ல மெல்ல அதிகரித்து வந்திருந்தாலும் கூட சென்ற ஜனாதிபதித்தேர்தலிலும், அதைவிட முக்கியமான சர்வசனவாக்கெடுப்பிலும் 1983 இடைத்தேர்தலிலும், அவற்றின் பங்கும், பணியும் வழமையிலும் மிக அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தன. இதே போன்றுதான் வேலை நிறுத்தங்களை முறியடிக்கவும், அரசியல் எதிராளிகளது போராட்டங்களை முறியடிக்கவும், கூட்டங்களை குழப்பவும் முன்னைய காலங்களில் காடைத்தனம் இடையிடையே பயன்பட்டு வந்திருந்தாலும் 1977க்குப் பிறகு அதன் உபயோகம் பரிமாண அளவில் மட்டுமன்றி அதன் பண்பிலும் மிகப்பெரிய மாற்றத்தைக் கண்டிருக்கின்றது.

அரசாங்கக் கட்சிக் குண்டர்படைகள் ஊடுருவாத அரசியல்-சமுதாயத் துறையில்லை எனலாம். தொழிற்சங்கத்துறையில் ஜே.எஸ்.எஸ். கும்பலின் முக்கியத்துவம் பற்றிச் சொல்லி விளக்க வேண்டிய அவசியம் இல்லை. இன்று நீதிபதிகளைக்கூட மிரட்டுமளவுக்கு காடையர்கட்கு அதிகாரம் வளர்ந்திருக்கிறது. பொலிஸார் கூட இவர்களை மதித்து நடப்பதற்குப் பயிற்றப்பட்டுள்ளனர் என்றே தோன்றுகிறது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை குண்டர்படை என்பது பொறுப்பு என்று எதுவுமேயில்லாத அதிகாரத்தை அதற்கு வழங்க வல்ல ஒரு ராணுவம். பொலிஸாரோ, விமானப்படையோ, கடற்படையோ ராணுவமோ ஏதாவது அசம்பாவிதத்தில் ஈடுபட்டால் அரசாங்கம் அதற்குச் சிலசமயம் விளக்கம் தந்தே தீரவேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. குண்டர் படைகளின் செயலை அரசாங்கம் அப்படியே கைகழுவி விடலாம். வேண்டுமானால் சென்ற ஜூலை/ஓகஸ்ட் சம்பவங்களின் போதும் செய்தது போன்று ஏதாவது எதிர்க்கட்சிகளது ஒரிரண்டு தலையில் கூடச் சுமத்திவிடலாம்.

குண்டர்படையில் உள்ள ஒரு பெரும் ஆபத்து என்னவென்றால் அதன் கட்டுப்பாடின்மை. அரசாங்கக் கட்சிக்குள்ளோ அரசாங்க அணிக்குள்ளோ பிளவு ஏற்படும் சமயம் குண்டர்படைகளைக் கட்டுப்படுத்துவது சிரமமாகிவிடும். சிலசமயம் குண்டர் படைகளின் உற்சாகம் கரைபுரண்டு எதிர்பாராத விளைவுகளையும் ஏற்படுத்திவிடக் கூடும்: அரசியல் நெருக்கடிகளின்போது குண்டர் படைகளுள் கிளர்ச்சிகள் ஏற்பட்டு எஜமானர்கள் மீதே தாக்குதல் ஏற்படவும் இடமுண்டு. (இப்போதைக்கு அந்த அபாயம் இங்கே இல்லை!)

நமக்குள்ள ஒரு புதிய பிரச்சனை என்னவென்றால் சில நேரங்களில் குண்டர் படைகட்கும் மற்றப் படைகட்கும் வேறுபாடு தெரியாமல் போய்விடுகிறது. சட்டத்தையும் ஒழுங்கையும் காக்க வேண்டிய சக்திகள் அவற்றை மறுப்பதில் தம் கவனத்தைக் காட்டிய சந்தர்ப்பங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வந்துள்ளன. இதுபற்றி அரசாங்கமும் அதிகம் மகிழ்ச்சி அடைய இடமில்லை. ஆயினும் இதற்கான மூலகாரணம் அவர்கள் உரமிட்டு வளர்த்த காடைத்தனத்தின் வளர்ச்சியேயொழிய வேறல்ல.

அரசாங்க ஆதரவுபெற்ற காடைத்தனத்திற்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்ற பிரச்சனைக்கு இன்றுபல அரசியல் கட்சிகளும் பதில் தேடவேண்டியுள்ளது. சட்டத்தையும் நீதி நியாயத்தையும் மீறும் காரியங்களைச் சட்டமும் நீதி நிர்வாகமும் அடக்கமுடியாத சூழ்நிலையில் அரசாங்கம் தன் கடமையில் தவறிவிடுகிறது. முள்ளை முள்ளாலேயே எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு அரசியல் கட்சிகள் உந்தப்படுகின்றன. சட்டத்தையும் நீதியையும் மீண்டும் நிலைநாட்ட அவற்றுக்கு வெளியே செயற்பட வேண்டிய நிர்ப்பந்தம் எதிர்க்கட்சிகட்கு ஏற்படுகின்றதெனில் குற்றவாளி அரசாங்கமே ஒழிய வேறு யாருமில்லை.

★

## கேடுவரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே!

எந்த வகுப்புவாத சக்திகளை எல்லாம் தங்களது நலன்களுக்காக உற்சாகப்படுத்தி வளர்த்தார்களோ அதே சக்திகள் இன்று அரசாங்கம் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வளர்ந்துவிட்டன. பாதுகாப்புப் படைகளுள்ளும் காவல்படைகளுள்ளும் உள்ள கட்டுப்பாடின்மை ஒருபுறமிருக்க சிங்களப் பேரினவாதிகளே நடத்தும் புதிய இனவாதக்குடியேற்ற நடவடிக்கைகள் இன்று அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை மீறி விட்டன. நாட்டில் இனவாத வன்முறை பரவுவதற்கு மேலும் மேலும் சாதகமான சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. இவற்றைக்கட்டுப்படுத்த ஒருவித செயலும் இல்லாத சூழலில் இனவாதிகட்கு மேலும் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மீனவ வாடிகளிலுள்ள பிறபிரதேச மீனவர்கட்குத் துப்பாக்கி வைத்திருக்க லைசன்ஸ் வழங்கும் தீர்மானம் கிழக்கிலங்கையில் அமைதியைக் குலைக்கவே உதவும் என்று தெரியாமலா அரசாங்கம் செயற்படுகிறது?

★

## பேச்சுவார்த்தை ஏய்ப்பு வார்த்தையாக வேண்டாம்!

தேசிய சிறுபான்மை இனப் பிரச்சனைச்சனையைத் தீர்ப்பதில் அரசாங்கத்துக்கு உள்ள அக்கறை பற்றி நமக்குள் அதிகம் பிரமைகட்கு இடமில்லை. மட்டக்களப்பில் வடமுனையில் கலவரங்களின் போதே நடத்தப்பட்ட பெரும் சிங்களக் குடியேற்றம் பல்கலைக்கழக மாணவர் பிரச்சனையில் அசட்டை, நட்ட ஈடுபற்றிய எதிர்பார்ப்புகளை வளர்த்துவிட்டபின்பு கண்துடைப்பாகத் தூக்கி வீசப்பட்ட சில்லறைத் தொகை, வேறுவழி இல்லாமல் பழைய பனைகட்கு மீண்டவர்கட்குப் பாதுகாப்பு வழங்காமை போன்ற விஷயங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். இதே போன்று பேச்சுவார்த்தை விஷயத்திலும் கலவரங்கட்கு முன்பிருந்தே தட்டிக்கழிக்கும் பாங்கில் அரசாங்கம் செயற்பட்டு வந்திருந்தது போக, பிரச்சனையின் மூலகாரணமே பிரிவினைவாதம் தான் என்றவிதமான திரிப்பும் உலக அபிப்பிராயத்தை மாற்ற வரிசை வரிசையாகப் பொய்களும் அன்றாடப் பிரச்சனைகளினின்று சிங்கள மக்களது கவனத்தைத் திசை திருப்பு முகமாக பயங்கரவாதம் பற்றிக் கட்டியெழுப்பப்படும் பயங்கரமான புளுகுகளும் மிரட்டல்களும் அரசாங்கத்திடம் உருப்படியாக எதையுமே எதிர்பார்ப்பவர்கள் ஏமாளிகளாகவே இருக்க வேண்டுமென்ற நிலையையே உருவாக்கிவிட்டது. பார்த்தசாரதியின் தூது என்ன நல்ல விளைவைத் தருமோ என்ற எதிர்பார்ப்பில் இருப்பவர்கள் கொஞ்சம் தூக்கத்திலிருந்து விடுபடுவது பயனுள்ளது. பேச்சுவார்த்தைகளை எல்லாம் மோசடிக்காகவும் தம் குற்றங்களை மூடிமறைக்கவும் தயங்காத நபர்களை எதிர்நோக்குகிறோம் என்பதை நாம் மறந்துவிட முடியாது. மாவட்ட சபைகள், அரசியல்சட்டத்தில் சிறுபான்மை இன உரிமைகட்கு இடமளிப்பு என்றெல்லாம் சட்டபூர்வமாக ஏமாற்றத் தெரிந்தவர்கட்குப் பேச்சு வார்த்தைகள், உடன்படிக்கைகள் எல்லாம் எம்மாத்திரம்?

தேசிய சிறுபான்மை இனப்பிரச்சினையை (அதிலும் முக்கியமாக வடக்கு-கிழக்குத் தமிழர்பற்றிய பிரச்சனையை) மற்றப் பிரச்சனைகளினின்று பிரித்தே நோக்கப்பழக்கப்பட்டவர்கட்கு இப்பிரச்சனைக்கு இலகுவான தீர்வுகள் சாத்தியமாக்கப்படக்கூடும். 1948 இல் மலையகத் தமிழர்கட்கு வாக்குரிமை போனது வெறும் இனப் பிரச்சனையாகவே நமக்குக் காட்டப்பட்டது. அது முக்கியமாக தொழிலாளிவர்க்கத்தின் செல்வாக்கை முறியடிக்கும் செயலே என்பதை மாக்ஸியவாதிகளைவிட மற்றவர்கள் ஏற்கவில்லை. இன்றைய தேசிய சிறுபான்மை இனப்பிரச்சனையின் ஒவ்வொரு அம்சமும் நாட்டின் பயங்கரமான பொருளாதார நெருக்கடி ஜனநாயக உரிமைகளின் சிதைவு போன்ற பிரச்சனைகளினின்று பிரித்துநோக்க முடியாதவை. பரந்துபட்ட வெகுஜனங்களைப் பிரித்து வைப்பதில் இனவாதம் வெற்றி கண்டுள்ளது என்பது உண்மை. ஆனாலும் இது நிரந்தரமான வெற்றி அல்ல. இனப் பிரச்சனையைக் காட்டிப் பயங்கரவாதம் பிரிவினைவாதம் என்ற போர்வைகளின் கீழ் அடக்குமுறையை பலப்படுத்தும் நிலையை நாம் கவனிக்கத் தவறிவிடக்கூடாது. பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சனைகளில் சிலவற்றுக்காவது தீர்வு இருக்கும் என்பதை நாம் மறுத்ததில்லை. ஆனால் தீர்க்கும் நோக்கம் யூ.என்.பி அரசாங்கத்துக்கு உண்டா என்பதில் நமக்கு எப்போதுமே ஐயம் உண்டு. ஆயினும்கூட, (பிரமைகள் எதுவும் இல்லாமலே) பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதை நாம் வலியுறுத்துகின்றோம். ஆயினும் உண்மையில் அடிப்படையான பிரச்சனை இன்று ஜனநாயக உரிமைகள் தொடர்பானது என்பதை மீண்டும் வலியுறுத்தவே விரும்புகிறோம்.

ஸ்டாலின் ஹிட்லருடன் பேச்சுவார்த்தைகளில் இறங்கியது ஹிற்லரின் மோசடிகளை அறியாமல் அல்ல. சியாங்கைஷேக்கின் பித்தலாட்டங்களை நன்றாக அறிந்துகொண்டுதான் மாஓ அவனுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு ஆதரவு தெரிவித்தார். பேச்சுவார்த்தைகள் பற்றிய பிரமைகள் வேண்டாம். அவை அந்தரங்கசுத்தியுடன் நடத்தப் படுமா என்பதைக் கூட ஆராயவேண்டாம். நியாயத்துக்கான போராட்டத்தில் எதிரி ஏமாற்றுவான் என்று தெரிந்துகொண்டே அவனுடன் சமரசம் பேசுவதுகூட போராட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் ஆகும். வெகு விரைவிலேயே பரந்துபட்ட சிங்கள மக்கள் இந்தப் போலிகள் கூட்டத்தை முற்றாக இனங்காணும் சூழ்நிலை உருவாகி வருகிறது.

★

### வேண்டுகோள்!

செம்பதாகை விற்பனையாளர்கள் இவ்வருடத்திற்குச் செலுத்தவேண்டிய சகல பாக்கிப் பணத்தையும் 83 மார்கழி 31ம் திகதிக்கு முன் செலுத்திவிடும்படி வேண்டப்படுகின்றனர். அல்லாவிடின் அவர்களுக்கு பத்திரிகை தொடர்ந்து அனுப்பப்பட மாட்டாது. அதேபோல் சந்தாதாரர்களும் அடுத்தவருடச் சந்தாவை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

நிர்வாகி
"செம்பதாகை"

# தமிழர் பிரச்சினையின் அடிப்படை பொருளாதாரப் பிரச்சினையே!

நமது அரசியல் நிருபர்

மூன்றாம் உலக நாடுகள் இன்று பல்வேறுவித நெருக்கடிகளையும், சவால்களையும், அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கியுள்ளன. இவற்றை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று இந்நாடுகள் நவகாலனித்துவப் பிடிக்குள் இறுக்கப்பட்டு வருவதால் ஏற்பட்டுள்ள மோசமான பொருளாதார அரசியல் நெருக்கடிகள். இரண்டாவது, சோவியத், அமெரிக்க மேலாதிக்க வல்லரசுகள் இரண்டினதும் உலக ஆதிக்கத்திற்கான போட்டிக்கு இந்நாடுகள் இரையாகும் அபாயம்.

இந்த முதலாவது வகை சார்ந்த பொருளாதார அரசியல் நெருக்கடிகள் மோசமடைவதன் மூலம் மூன்றாம் உலக நாடுகளில் இரண்டாவது வகை சார்ந்த மேலாதிக்க வல்லரசுகளின் தலையீடு மறைமுகமாகவும், நேரடியாகவும் ஏற்பட்டு வருகின்றது. இதனால் பல மூன்றாம் உலக நாடுகள் தத்தமது தேசிய சுதந்திரம், தேசிய பொருளாதாரம் என்பவற்றை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. ஏற்கனவே சில மூன்றாம் உலக நாடுகள் மேலாதிக்கவல்லரசுகளின் பிடிக்குள் சிக்கியுள்ளனவதையும் காண முடியும்.

## நவகாலனித்துவ பிடிப்பு

நமது நாடும் ஒரு மூன்றாம் உலகநாடு என்பது தெரிந்ததே. இங்கும் நவகாலனித்துவப் பிடியானது நாளுக்கு நாள் இறுகி வருகின்றது. அதன்மூலம் மோசமான பொருளாதார அரசியல் நெருக்கடிகள் வளர்ந்துள்ளன. ஆனால் அவை வேறொரு கோணத்தில் ஆளும் பெரு முதலாளித்துவ வர்க்கத்தினால் திசை திருப்பப்பட்டுள்ளன. அது தேசிய இனப் பிரச்சினை என்ற ரூபத்தில் வெளிப்படுகின்றது. முதலாளித்துவ பிற்போக்கு ஆளும் வர்க்கம் எப்பொழுதும் மக்களைப் பிரித்து ஒருவரோடு ஒருவரை மோத வைப்பதன் மூலம் தமது சுரண்டலையும், தமது ஆளும் நிலையையும் பேணி வருகின்றன. பொருளாதாரச் சுரண்டலையும் அரசியல் அடக்குமுறைகளையும் நாட்டின் உழைக்கும் மக்கள் கண்டு கொள்ளாதவாறு தடுப்பதற்கு தேசியஇனங்கள் மத்தியில் சகிப்புணர்வுகளையும், விரோத நிலைப்பாடுகளையும் பிரசாரத்தில் மட்டுமன்றி நடைமுறை ரீதியிலும் செயல்படுத்தி வருகின்றனர்.

தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகள் வெறும் இன உணர்வுகள் சார்ந்த பிரச்சினைமட்டுமல்ல. மார்க்சிஸ லெனினிசம் கூறும் வர்க்கக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்தால் தேசிய இனப்பிரச்சினையானது பொருளாதார அடிப்படைகளையே கொண்டது என்பது புலப்படும். தமிழ்மக்களும், ஏனைய சிறுபான்மையினரும், புறக்கணிப்புக்களுக்கு, பாகுபாட்டிற்கு உள்ளாக்கப்படும் குடியேற்றம், வேலைவாய்ப்பு, கல்வி, உத்தியோகமொழி, அதே போல் பெருந்தோட்டத் துறையிலான இந்திய வம்சாவழித் தமிழ்த் தொழிலாளர்களுக்கு (இத்துறையில் சிங்களத் தொழிலாளர்களும் உள்ளனர்) இழைக்கப்படும் அநீதிகள் போன்ற சகலதையும் உற்றுநோக்கினால் அவை நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளோடு பின்னிப்பிணைந்து கிடப்பதைக் காணலாம்.

## நிலமின்மையும் குடியேற்றமும

அரசுக்குச் சொந்தமான காடுகளை அளித்து அதில் குடியேற்றத் திட்டங்களை உருவாக்கி நிலமற்ற மக்களுக்கு நிலம் வழங்கும் கொள்கை சுதந்திரத்திற்குப்பின் கடைப்பிடிக்கப்பட்டது. நமது நாட்டின் விவசாய உற்பத்தி பெருகவும், நிலமற்றோருக்கு நிலம் கிடைக்கவும், மக்கள் பரந்துவாழவும் இத்திட்டம் வரவேற்கக்கூடிய ஒன்றாகக் காணப்பட்டது. ஆனால் இத்திட்டத்தை முதல் முதலில் நடைமுறைப்படுத்திய டி. எஸ். சேனநாயக்கா போன்ற பேரினவாதத்தலைவர்கள் பிறிதொரு உள்நோக்கத்தை அதாவது தமிழ் மக்களின் பாரம்பரிய வடக்குக் கிழக்கு பிரதேசங்களை சிங்களக்குடியேற்றங்களைக் கொண்டு அபகரிப்பதையேகுறிக்கோளாகக் கொண்டனர். இங்கே குடியேற்றிய தலைவர்களுக்கும் குடியமர்த்தப்பட்ட நிலமற்ற சிங்கள மக்களுக்குமிடையில் ஒரு எல்லைக் கோட்டை வரைவது அவசியம். நிலமற்ற மக்களைப் பொறுத்து இதுவரை காலமும் ஒருகுழி நிலத்தை யாவது பெற்றிராத ஒரு மனிதனுக்கு ஐந்துஏக்கர் அல்லது மூன்றுஏக்கர் நிலமும் வீடும் ஏனைய வசதிகளும் செய்து கொடுக்கப்படும் பொழுது அந்த மனிதன் எந்தக்கஷ்டங்களையும் தாண்டி அந்த நிலத்தைப் பெறவும், பாதுகாத்து அதில் வாழவும் முயலுவது இயல்பானதொன்றே. ஆட்சியில் உள்ளவர்கள் தமது பேரினவாத நோக்கத்தை நடைமுறைப்படுத்த நிலப்பசியிலுள்ள மக்களுக்கு மற்றொரு இனத்தின் பாரம்பரிய பிரதேசத்தில் திட்டமிட்ட குடியேற்றத்தை நிறுவி இனவிரோத கருத்துக்களையும் கூடவே விதைத்து விடுகின்றனர். விளைவு அப்பிரதேச மக்களும் குடியமர்த்தப்பட்ட மக்களும் தீராப் பகையாளி ஆகின்றனர். அதேவேளை ஆளுவோர் இருபகுதி மக்களின் மீதும் சுமைகளைச் சுமத்தி தமது ஆட்சியைச் கலபமாக்கிக் கொள்கின்றனர். நிலமின்மை என்ற அடிப்படையான பொருளாதாரப் பிரச்சினை திட்டமிட்ட குடியேற்றம் என்ற ரூபத்தில் இனப்பிரச்சினையின முக்கிய அம்சமாக மாறுகின்றதை அவதானிக்க முடிகிறது. இதில் அடிப்படை என்ன என்பதை ஒருவர் ஆழமாகப்புரிந்து கொள்ளமறுத்தால் அவர் வெகுசுலபத்தில் இனவாத உணர்வுகளால் கட்டுண்டுபோக முடியும். நாடு தழுவிய நிலப்பிரச்சினையின் தன்மை பற்றி அத்தகைய ஒருவரால் புரிந்து கொள்ளக் முடியாத நிலை ஏற்படும்.

## கல்வியும் வேலைவாய்ப்பும்

கல்வியும், வேலைவாய்ப்பும் அத்தகையதே. வருடாவருடம் இலங்கை பூராவும் 25 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெறுகின்றார்கள். ஆனால் அவர்களில் 5ஆயிரம் பேர்மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள். புள்ளிகள் அளிப்பதில் பாகுபாடு காட்டி தமிழ் மாணவர்களைத் தரப்படுத்தலுக்கு உட்படுத்துதல் இந்த 5ஆயிரத்திற்குள் அடங்கிய பிரச்சினையே. அதுவும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல. தரப்படுத்தலால் தமிழ் மாணவர்களைக் குறைக்கின்றோம் என்று ஆட்சியில் உள்ளோர் சிங்கள மக்களை ஏமாற்றுகின்றனர். அதையே ஒரு பெரும் பிரச்சினை எனக் கூறி மறுபக்கத்தில் உள்ள தமிழ் அரசியல் வாதிகள் குரல் வைக்கிறார்கள். ஆனால் தகுதி இருந்தும் அனுமதி கிடைக்காத இருபதினாயிரம் சிங்கள-தமிழ்-முஸ்லீம் மாணவர்களின் கதி பற்றி எவருமே குரல் வைப்பது கிடையாது. இது ஏன் இப்படி நடைபெறுகின்றது. அங்கே நமது பொருளாதார அமைப்பின் வங்குரோத்து நிலையும், சொத்துடைய ஆளும்வர்க்க ஆட்சி

(6ம் பக்கம் பார்க்க)

# இனவாதத்தின் புதிய குரல்

முதலாளித்துவ பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியலுக்கும் இனவாதத்திற்கும் இடையிலான உறவு எப்பொழுதும் பகிரங்கமானதொன்றே. இதை மேலும் தெளிவாகக் காண வேண்டின் அண்மைக்கால பாராளுமன்றப் பேச்சுக்களின் பக்கம் திரும்பினால் தெரிந்துவிடும். இப் பேச்சுகளின் போது இரண்டு புதிய இனவாதக் குரல்கள் ஓங்கி ஒலிப்பதைக் காணலாம். ஒரு காலத்தில் இனவாத யாத்திரைஒன்றுக்கு எதிராக வீதியின் குறுக்கே கிடந்து அதைக்கலைக்கச் செய்து "இம்புல்கொடவீரன்" என்ற பட்டம் பெற்று தமிழ் மக்களினதும் சிங்கள முற்போக்கு மக்களினதும் அன்பையும் மதிப்பையும் பெற்ற ஒருவரின் குரலே இன்று புதிய இனவாதக் குரலாக ஒலிக்கிறது. மற்றைய குரலுக்கும் ஒரு சரித்திரம் உண்டு. இலங்கையின் இடதுசாரி இயக்கத் தலைவர்களில் ஒருவர் எனப் பெயர்பெற்று தனது இறுதிக் காலத்தில் பூரண வலதுசாரியாகி வாழ்வை முடித்துக் கொண்ட ஒரு தந்தையின் மைந்தன் குரலே புதிய இனவாதமாக ஒலிக்கிறது. அந்த வேளை இவ்விரண்டு குரல்களும் முற்போக்குப் பேசவும் மறந்ததில்லை.

ஒரு இனம் பெரும்பான்மையாக இருப்பினும் அல்லது சிறுபான்மையாக இருப்பினும் அந்த இனத்தின் நியாயமான உரிமைகளை, சலுகைகளைப் பற்றிப் பேசுவது என்பது ஒருபோதும் இனவாதம் ஆகாது. அது நியாயமான கோரிக்கையின் குரலாகவே இருக்கும். ஆனால் நியாயத்திற்கும் நீதிக்கும் அப்பால்சென்று ஒரு இனத்தின் உரிமைகளைக் கோருவதாக அல்லது பாதுகாக்க நிற்பதாகக் கூறி மற்றைய இனத்தின் உரிமைகளின் மீது கைவைப்பதோ அன்றி காழ்ப்புணர்ச்சி கொண்டு அவ் இனத்தை அடக்கும்படி கோரிக்கை விடுவதோ நியாயமான குரலாக இருக்காது. அது நிச்சயம இனவாதக் குரலாகவே இருக்கும். இன்றைய இரண்டு புதிய இனவாதக் குரல்களை இவ்வாறே நாம் அர்த்தப்படுத்தவேண்டும்.

இந்த இரண்டு முற்போக்குகளின் புதிய இனவாதக் குரல்களைத் தமக்கு ஒரு தடியாக்கிக்கொள்ளும் சிலர் அத் தடியால் உண்மையான முற்போக்கு இடதுசாரி சக்திகளுக்கு அடிகொடுக்க முனைகிறார்கள். ஆனால் அது ஒரு வலுவான தடியல்ல என்பதை அவர்கள் உணரவில்லைப்போலும்; எக்காலத்திலும் இடதுசாரி முற்போக்கு சக்திகளின் பக்கம் திரும்பாது தமிழ் இனவாதத்திற்கு ஆணைபோன பிற்போக்கு சக்திகள்மட்டுமே இப்புதிய இனவாதக் குரல்களால் ஆதாயம்தேட முனைபவர்கள் என்பதை மக்கள் அறிவர்.

இங்கே நாம் சுட்டிக்காட்டுவது யாதெனில் முதலாளித்துவ பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியல் சேற்றில் இறங்குபவர்களில் இனவாதம் அற்றவர்கள் என்பது இல்லை மறை காயாக மட்டுமே இருக்கமுடியும்.

இப்புதிய இனவாதக் குரலுக்குரியவர்களில் ஒருவர் பல கட்சிக்குத்துக்கரணங்கள் போட்டு இன்று தனியாக நிற்பவர். அவருக்கு எஞ்சி உள்ள ஒரே ஒரு தஞ்சம் இனவாதம் மட்டுமே. மற்றவர் பாராளுமன்றத்திற்கு புதியவர். தனது எதிர்கால வளர்ச்சிக்கு இனவாதத்தை ஒரு கருவியாக்க முனைகிறார்.

ஒரு உண்மை. இதுவரை எந்த இனவாதியும் முழுமையாக வெற்றி பெற்றதில்லை. மக்கள் அறிவில் முட்டாள்கள் அல்ல.

## சிந்திக்கவேண்டிய செய்திகள்

சில காலத்திற்கு முன்பு பெரும் தொழில் அதிபரும் வடபகுதி எம். பி யுமான ஒருவர் கோழித்தீன் உற்பத்தி செய்வதற்கான ஒரு தொழிற்சாலையை நிறுவ முன்வந்தார். அவர் இதுபற்றி அத்துறையில் நிபுணத்துவம் பெற்ற ஒரு தமிழ் நிபுணரிடம் ஆலோசனை கோரினார். தமிழ்ப்பிரதேச முன்னேற்றத்தில் அதிக அக்கறை கொண்ட அந்த நிபுணர் இவ்வாறான ஒரு கோழித்தீன் தொழிற்சாலை அமையக் கூடிய இடம் மட்டக்களப்பாக இருந்தால் சகல வழிகளிலும் சிறப்பானது என ஆலோசனை கூறினார். ஆனால் அந்த தொழிலதிபர்—எம். பீக்கு இது கசப்பாகவே இருந்தது. மட்டக்களப்பில் அத் தொழிற்சாலை அமைவதை அவர் ஒரேயடியாக மறுத்து தெல்லிப்பளையில் அமைப்பதையே விரும்பினார்- அந்த நிபுணருக்கோ இதுதான் இவர்கள் கூறும் "தமிழ்ப் பிரதேச பாதுகாப்பா" "தமிழர் பொருளாதார வளர்ச்சியா" என்ற அதிர்ச்சியே ஏற்பட்டதாம்.

கிளிநொச்சி அகதி முகாமில் ஊழலும்—மோசடியும் இடம்பெறுவதாகக் கூறி மேல் அதிகாரிகளுக்கு புகார் செய்த இந்திய வம்சாவழித் தமிழ் அகதி ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறின. நீதிகேட்ட அத் தமிழ் அகதியைத் தாக்கியவர்கள் சிங்களக் காடையர்கள் அல்ல, சுத்தமான தமிழர்களே!

வைத்தியத் துறையில் மிகவும் நிபுணத்துவம் பெற்ற சில தமிழர் சம்பாதிக்கவும், குடியிருக்கவும் வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டார்கள். இன்னும் சிலர் விரைவில் சென்றுவிட ஆயத்தம் செய்கிறார்கள். இவர்களுக்கு இங்கே பணம் சம்பாதிப்பது ஒரு பிரச்சினை அல்ல. நமது சூழலே பிரச்சனையாம். இதனால் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி பாதிக்கப்படுகின்றதாம். ஆகலால் தமது வாழ்க்கையை வெளிநாடுகளில் அமைத்துக்கொள்ள முடிவு செய்து விட்டார்கள். என்னே 'தமிழர்' பெருமை!

★

தமிழர் கூட்டணியின் தலைவர்கள் தமதுபிள்ளைகளின் கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றிக்கான முயற்சிகளை வெளிநாடுகளில் செய்து வருகின்றனர். இந்தியா, இங்கிலாந்து, கனடா, அவுஸ்ரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் தமது பிள்ளைகளை கல்வி கற்பிக்கவும், வேலை பெற்றுக் கொள்ளவும் முயலுகின்றனர். அதற்காக இங்கு உள்ள சொத்துகளில் ஒரு பகுதியை விற்றும் வருகின்றனர். சிலர் இந்தியாவில் சொத்துக்கள் வாங்கியும் உள்ளனர். சொத்துள்ளவன் "சொர்க்கத்திற்கும்" செல்லலாம். ஆனால் ஏழைத்தமிழர் எங்கு செல்வது?

# எங்கிருந்து தொடங்குவது?

நம் கருத்தில், ஓர் அகில ருஷ்ய அரசியல் செய்தித்தாளை நிறுவுவதே, நம் செயலின் ஆரம்பப் புள்ளியாக, நாம் விரும்பும் அமைப்பைப் படைக்கும் முதல் நடைமுறை வேலையாக இருக்க வேண்டும். இந்தச் செய்தித்தாளே அமைப்பை ஒரே சீராக வளர்க்கவும் செழுமைப் படுத்தவும் விரிவுபடுத்தவும் அடிப்படை யம்சமாகப் பயன்படும். எல்லாவற்றிற்கும் மேலாக நமக்கு அவசியமானது ஒரு செய்தித்தாளே. அதில்லாமல் நாம் கோட்பாடு ரீதியில் முரணில்லாததும் முழுமையானதுமான பிரசாரத்தையும் கிளர்ச்சியையும் முறையாக நடத்தமுடியாது. ஆனல் அத்தகைய பிரசாரத்தையும் கிளர்ச்சியையும் நடத்துவது பொதுவில் சமூக-ஜனநாயகவாதத்தின் நிலையான, முக்கியமான கடமையாக, குறிப்பாகத் தற்காலத்துக்குரிய அவசரக் கடமையாகத் திகழ்கிறது; ஏனெனில் இப்பொழுதே மிகப் பரவலான மக்கட் பகுதிகளிடையே அரசியலிலும் சோசலிஸம் பற்றிய பிரச்சினைகளிலும் மிக அதிக அக்கறை கிளம்பியிருக்

யாகும். இந்த வேலைகள் அவர்களின் கண்ணோட்டத்தையும் செயல்களின் பரப்பையும் மறைமுகமாகச் செயல்படுவதில் திறனையும் ஆயத்தமான நிலையையும் குறுக்கிவிடுகின்றன. சிதறுண்டு கிடக்கும் இந்நிலையில்தான் முன்னே குறிக்கப்பட்ட நிலையில்லாமை ஊசலாட்டம் ஆகியவற்றின் மிக ஆழமான வேர்களைப் பார்க்க வேண்டும். இந்தக் குறைபாட்டைக் களைந்தெறிவதில், பல்வேறு வட்டார இயக்கங்களை ஒரே அகில ருஷ்ய இயக்கமாக மாற்றியமைப்பதில், எடுத்துக் கொள்ள வேண்டிய முதல் நடவடிக்கை அகில ருஷ்யச் செய்தித்தாளைத் தொடங்குவதேயாகும். கடைசியாக, நமக்கு தேவையான பத்திரிகை ஓர் அரசியல் செய்தித்தாளாகவே இருக்க வேண்டும். அரசியல் செய்தித்தாள் ஒன்று இல்லாமல், அரசியல் இயக்கம் என்று அழைக்கத் தகுதியுடைய இயக்கத்தைப் பற்றி இன்றைய ஐரோப்பாவில் சிந்திக்கவே முடியாது. அச்செய்தித்தாள் இல்லாமல், நமது கடமையை—அரசியல் அதிருப்தியையும் கண்டனத்தையும்

**லெனின்**

**1901 மே**

ஒரு மேடை இல்லை. பேச்சாளர்களின் பேச்சுகளை ஆவலுடன் கேட்டு அவர்களை ஊக்குவிக்கக் கூட்டத்தினர் இல்லை. தவிரவும், 'சர்வ வல்லமை வாய்ந்த' ருஷ்ய அரசாங்கத்தின் மீது குறை சொல்வதற்கேற்ற சக்தியை மக்களிடையே எங்கும் அவர்கள் காணுவதற்கில்லை. ஆயினும் இவையெல்லாம் மின்னல் வேகத்துடன் இப்பொழுது மாறி வருகின்றன. இப்படிப்பட்ட சக்தி இருக்கத்தான் செய்கிறது, இது புரட்சிகர

கடந்த இதழ் தொடர்:

மான பாட்டாளி வர்க்கமாகும். அரசியல் போராட்டத்திற்குத் தன்னைக் கூவி அழைக்கும் அறைகூவலுக்குச் செவிகொடுத்து அதை ஆதரிப்பது மட்டும் அல்லாமல், போராட்

பெரிய நகரங்களின் தொழிலாளர் சேரிகளிலும் தொழிற்சாலை குடியிருப்புகளிலும் உண்மையான சொந்தக்காரனுகச் செய்கிறது—இக் காரணங்களினுல் எல்லாம் ஓர் அரசியல் செய்தித்தாளைத் தொடங்குவது பாட்டாளி வர்க்கத்துக்கு முற்றிலும் சாத்தியமான செயலாகிவிடுகிறது. பாட்டாளி வர்க்கத்தின் வாயிலாக அந்தப் பத்திரிகைப் நகர்புற சிறு முதலாளித்துவத்தினர் நாட்டுப்புறக் கைத்தொழிலாளர்கள், கிராம விவசாயிகள் ஆகியோரின் அணிகளில் ஊடுருவி, உண்மையிலேயே பொதுமக்களுக்குரிய அரசியல் செய்தித்தாளாகிவிடும்.

எனினும், செய்தித்தாள் ஆற்ற வேண்டியபங்கு, கருத்துக்களைப் பரப்புவதிலும் அரசியல் அறிவைப் புகுத்துவது அரசியல் கூட்டாளிகளை ஈர்த்துக் கொள்வது ஆகிய நடவடிக்கைகளில் மட்டும் அடங்கிவிடுவதில்லை. பத்திரிகை என்பது கூட்டுத்துவப் பிரசாரகனுகவும் கூட்டுத்துவக் கிளர்ச்சிக்காரனுகவும் இருப்பதோடு கூட்டுத்துவ ஒழுங்

பத்திரிகைகளுக்கு முறையாகச் செய்தி வழங்குவது, பிரதிகளைச் சரியாக வினியோகிப்பது ஆகிய செயல்துறைப் பணி மட்டுமே ஒன்றுபட்ட கட்சியின் வட்டார ஏஜெண்டுகளடங்கிய வலைப்பின்னலைப் படைப்பதை இன்றியமையாததாக்கிவிடும். அந்த ஏஜெண்டுகள் ஒருவரோடொருவர் நேரடியான தொடர்பு கொள்வார்கள். பொது நிலைமைகளோடு அறிமுகமாகி இருப்பார்கள். அகில ருஷ்ய வேலையின் தனித்தனிக் கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றப் பழக்கம் பெறுவார்கள்; மேலும், அந்தந்தப் புரட்சி நடவடிக்கைகளை நடத்துவதன் மூலம் தங்கள் வன்மையைச் சோதித்துப் பார்ப்பார்கள். இந்த ஏஜெண்டுகளின் வலைப்பின்னல் அமைப்பே நமக்குத் தேவையான அமைப்பின் அடிப்படையாக விளங்கிவிடும் அதாவது நாடு முழுமையும் தழுவி நிற்கக் கூடிய அளவுக்குப் பெரிய ஒரு அமைப்பாகும் அது. சரியான விவரமான வேலைப் பிரிவினை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு அது பரந்ததாயும் பலவகைப் பட்டதாயும் அமையும். எல்

## பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் பத்திரிகை பிரசாரகன் மட்டுமன்றி அமைப்பாளனும் ஆகும்

கிறது: தனி நபர்களின் செல்வாக்கினுலும் வட்டாரத் துண்டுப் பிரசுரங்களாலும் சிறு புத்தகங்களாலும் பிறவற்றுலும் நடைபெறுகின்ற சிதறலான கிளர்ச்சியை முறையான பொதுக் கிளர்ச்சி மூலம் வலுப்படுத்தும் அவசியம் இன்று போல் என்றும் இருக்கவில்லை: இந்தப் பொதுக் கிளர்ச்சியைப் பத்திரிகைகள் மூலமே முறையாக நடத்த முடியும். இதுவே நமது போர் நடவடிக்கைகளின் ஆரம்பத் துறையானலும் மிக முக்கியமான துறையாகும். இதைநாம் எவ்வளவு உறுதியாக நிறுவியிருக்கின்றோம் என்பதைக் கணிப்பதற்குச் செய்தித்தாள் எவ்வளவு அடிக்கடியும் ஒழுங்காகவும் வெளியிடப்படுகிறது (வினியோகிக்கப்படுகிறது) என்பதே மிகத் துல்லியமான அளவுகோலாகப் பயன்படும் என்றுல் அது மிகையாகாது. மேலும், நமக்குத் தேவையான பத்திரிகை, அகில ருஷ்யப் பத்திரிகையாகவே இருக்க வேண்டும். பத்திரிகைகளின் மூலம் மக்கள் மீதும் அரசாங்கத்தின்மீதும் நமது செல்வாக்கைநாம் ஒன்றுபடுத்த முடியவில்லையானுல், அவ்வாறு இருக்கும் வரையில் செல்வாக்கின் அதிக சிக்கலான, கடினமான, ஆனல் தீர்மானமான இதர வழி முறைகளை ஒன்றிணைப்பது பற்றிச் சிந்திப்பதெல்லாம் வெறுங் கற்பனையேயாகும். சித்தாந்த ரீதியிலும் நடைமுறை. நிறுவன வழியிலும் நம் இயக்கத்தை மிக அதிகமாகப் பாதிக்கும் குறைபாடு என்ன? சிதறியிருப்பதேயாகும். மிகப் பெரும்பாலான சமூக—ஜனநாயகவாதிகள் கிட்டத்தட்ட முழுமையாக வட்டார வேலைகளில் முழுகிக் கிடப்பதே

வெளிப்படுத்தும் அம்சங்கள் அனைத்தையும் ஒன்றுசேரத் திரட்டி, அவற்றைக்கொண்டு பாட்டாளி வர்க்கத்தின் இயக்கத்தைச் செழுமைப்படுத்தும் கடமையை—நாம் நிறைவேற்ற முடியவே முடியாது. நாம் முதல் நடவடிக்கையை எடுத்திருக்கின்ருேம்; அதாவது தொழிலாளிவர்க்கத்திடையே, 'பொருளாதார நோக்கில்' ஆலைகளில் நிகழும் அக்கிரமங்களை அம்பலப் படுத்த வேண்டுமென்ற ஆர்வத்துடிப்பை எழுப்பிவிட்டிருக்கின்ருேம். இப்பொழுது அடுத்த நடவடிக்கையை எடுக்க வேண்டும்: அதாவது கூடுதலாகவோ குறைவாகவோ அரசியல் உணர்வு பெற்றுள்ள எல்லா மக்கட் பகுதிகளிடமும் அரசியல் நோக்கில் அக்கிரமங்களை அம்பலப்படுத்தும் குரல்கள் மெலிந்து நலிவுற்று, அரிதாகி, நடுங்கிநிற்கும் நிலையினுல் நாம் மனந்தளரவே கூடாது. மக்கள் அனைவரும் போலீஸ் அடக்குமுறைக்கு முற்று முழுக்க அடங்கிக் கிடக்கிருர்கள் என்பது இதற்குக் காரணம் என்னவென்ருல் இச்செயலில் ஈடுபடத் திறமையும் சித்தமும் உள்ளவர்களுக்கு ஏறிப்பேச

டத்தில் தைரியமாக இறங்குவதற்கும் தான் ஆயத்தமாக இருப்பதை அது ஏற்கனவே வெளிப்படுத்திக் காட்டியுள்ளது, நாம் இப்போது நாடெங்கும் ஜார் ஆட்சியை அம்பலப் படுத்துவதற்கான ஓர் அரங்கத்தை அமைக்கும் நிலையில் இருக்கின்ருேம். அத்தகைய அரங்கத்தை அமைப்பது நம் கடமையாகும். அந்த அரங்கம் சமூக—ஜனநாயகவாதப் பத்திரிகையாக இருக்கவேண்டும். ருஷ்யத் தொழிலாளி வர்க்கம், ருஷ்ய சமுதாயத்தின் மற்ற வர்க்கங்களினின்றும் பிரிவுகளிலிருந்தும் வேறுபட்டதாய் அரசியல் அறிவைப் பெறுவதில் நிலையான அக்கறை காட்டுகிறது. அவ்வர்க்கத்திடையே சட்ட விரோதமான இலக்கியத்துக்கு எப்பொழுதும் (அதிகக் கொந்தளிப்பு ஏற்படும். காலகட்டங்களில் மட்டும் அல்ல) மிகப் பெரிய கிராக்கி உண்டு. திரளான மக்களிடையே இத்தகைய பெரிய கிராக்கி ஏற்பட்டிருப்பது, அனுபவமுள்ள புரட்சித் தலைவர்கள் தோன்றியிருப்பது தொழிலாளிவர்க்கம் ஓர் இடத்தில் குவிந்திருப்பது—இது தான் இவ்வர்க்கத்தைப்

கமைப்பாளனுகவும் உள்ளது. இவ்வகையில் இதனைக் கட்டிடம் கட்டும் பொழுது அதனைச் சுற்றி எழுப்பும் சாரத்திற்கு ஒப்பிடலாம்; சாரம் கட்டிடத்தின் புற வடிவத்தை காட்டுகிறது. தனித்தனிக் கட்டிடத் தொழிலாளர்களிடையே உள்ள தொடர்புக்கு வசதி ஏற்படுத்தி வேலையைப் பிரித்துக் கொடுக்கவும் ஒழுங்கமைந்த உழைப்பினுல் அடையப் பெற்ற பொதுப் பலன்களைக் கணித்தறியவும் உதவுகின்றது. செய்தித்தாளின் உதவியாலும் தொடர்பினுலும் ஒரு நிரந்தர அமைப்பு தானுகவே அமையத் தொடங்கும். அந்த அமைப்பு வட்டாரவேலைகளில் மட்டும் அன்றி, முறையான பொது வேலையிலுங்கூட ஈடுபடும் அரசியல் நிகழ்ச்சிகளைக் கவனமாகக் கண்காணிக்கவும், அவற்றின் முக்கியத்துவத்தையும் மக்கட்தொகையின் பல்வேறு பகுதியினரின் மீது அவை செலுத்தும் செல்வாக்கை மதிப்பிடவும், புரட்சிகரமான கட்சி இந்நிகழ்ச்சிகளை மாற்றி உருவாக்குவதற்கேற்ற வழிமுறைகளை வகுக்கவும் அது தன் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கும்.

லாவிதச் சூழ்நிலைகளிலும் எல்லாத் 'திருப்பங்களிலும்' எதிர்பாராத நிலைமைகளிலும் தனது சொந்த வேலையைத் தளர்த்து கொடுக்காமல் நடத்துவதற்கு அதற்குத் தேவையான உறுதி இருக்கும். அதிக பலம் படைத்த எதிரி, தன் அணிகளை எல்லாம் ஒரே இடத்தில் திரட்டிக் குவிக்கும் போது, அவனுடன் திறந்த வெளியில் போர் செய்வதைத் தவிர்க்கவும், ஆயினும் இந்த எதிரி எளிதில் இயங்க முடியாததைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அவன் சற்றும் எதிர்பாராத நேரத்திலும் இடத்திலும் அவனைத் தாக்குவதற்கும் போதிய அளவு திறன் அதற்கு இருக்கும். இன்று பெரிய நகரங்களின் தெருக்களில் ஆர்ப்பாட்டம் செய்யும் மாணவர்களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டுமென்ற கடமை நம்மை எதிர்நோக்கியிருக்கிறது. அது ஒப்பு நோக்கில் எளிதான கடமையாகும். நாளைக்கோ ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் உள்ள வேலையற்றவர்களின் இயக்கத்தை ஆதரிப்பது போன்ற ஒரு கடினமான கடமை நம்மை எதிர்நோக்கியிருக்கலாம். அதற்கு மறுநாள் விவசாயிகளின் எழுச்சியில் புரட்சிகரமான பங்கைக் கொள்ளும்படி நாம் தயாராய் இருக்கவேண்டிய அவசியம் ஏற்படலாம். இன்றைக்கு ஜெம்ஸ்துவோவுக்கு எதிரான அரசாங்க நடவடிக்கைகளினுல் உண்டான அரசியல் நெருக்கடியை நாம் சாதகப் படுத்திக்கொள்ள வேண்டும், நாளைக்கோ வெறிகொண்ட ஒரு ஜாரிஸ்டு கொள்ளைக்கார அதிகாரிக்கு எதிரான

(7ம் பக்கம் பார்க்க)

**வர்க்க சமுதாயத்தில் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் உறுப்பினராகவே வாழ்கின்ருர். ஒவ்வொரு சிந்தனையிலும் விதிவிலக்கின்றி ஒரு வர்க்கத்தின் முத்திரை குத்தப்பட்டிருக்கின்றது.**

—மாஓசேதுங்—

# பழமையும் புதுமையும்

★ க. கைலாசபதி

★ 'வசந்தம்' 1965

கடந்த சிலகாலமாக எமது இலக்கிய உலகிலே பலவிதமான வாதப் பிரதிவாதங்களும் கருத்துமோதல்களும் காணப்படுகின்றன. இவை இயக்கத்தின் இனங்காட்டிகள், வளர்ச்சியின் அறிகுறிகள். ஆயினும் எந்த மோதலையும் போல இங்கும் குழப்பம் விளைந்துள்ளது. குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளும் நிலை ஏற்படும் ஆபத்தும் தோன்றியுள்ளது. எனவே இன்றை இலக்கிய நிலையைச் சற்று நிதானமாக நோக்குவது பயன்தரும் செயலாகும்.

## மூன்று பொருள் பற்றியன

எம்மிடையே கேட்கும் உரத்த குரல்கள் மூன்று பொருள் பற்றியன. (1) பண்டைய இலக்கியம் (2) புதிய இலக்கியம் (3) இலக்கியமும் அரசியலும். இவை மூன்றும் ஒன்றுக்கொன்று விரோதமானவை என்னும் அடிப்படையிலேயே வாதப் பிரதிவாதங்கள் நடந்துள்ளன; நடைபெறுகின்றன. இம்மூன்று பொருள் பற்றியும் பலர் உணர்ச்சிவசப்பட்டு வாய்க்கு வந்தபடியெல்லாம் ஏசிப்பேசி உள்ளனர்.

பண்டை இலக்கியங்களை நன்கு படித்தறிந்தவர்கள் எந்தச் சமுதாயத்திலும் வெகு சிலரே. எனினும் காலத்தின் மதிப்புடன் நிலவுவனவாகையால், அவை பவித்திரமானவை என்னும் நம்பிக்கை இயல்பாகப் பலரிடம் குடிகொண்டுள்ளது. பெரும்பாலானோரைப் பொறுத்தவரையில் இது வெறும் மூடநம்பிக்கையே என்பதில் ஐயமில்லை. ஆயினும் நம்பிக்கை நம்பிக்கைதானே, அதன் சக்தியை நாம் மறந்துவிடலாகாது. அதுமட்டுமன்று. எமது பழைய இலக்கியங்களிற் பெரும்பாலானவை நிலப்பிரபுத்துவ, முடியரசுக் காலச் சமூக அமைப்பின் நிழலிலே தோன்றியவை; சைவசமயக் கோட்பாடுகளுடன் பின்னிப் பிணைந்தவை: ஏற்றத் தாழ்வு நிறைந்த சமூக உறவுக் கருத்துக்களைத் துணையாகக்கொண்டவை. இவை அழுங்குப்பிடியுடன் ஒட்டிக் கிடப்பன: தாமே இலகுவில் மாறா. வாழ்க்கை நிலை மாறும் பொழுது தான் உணர்வும் மாறுகின்றது. பண்டைய இலக்கியங்களையே படிக்கும் வாய்ப்பும், அவை காட்டும் வாழ்க்கைமுறையில் பற்றும் கொண்டவர்களைப் 'பழமை விரும்பிகள்' என்பது எளிது. ஆனால் அது பெருமைப்படக் கூடிய விஷயமன்று. கவலைக்குரிய விஷயம். பழமை விரும்பிகள் ஏன் அவ்வாறு தொடர்ந்து இருக்கின்றனர் என்று கேள்வியைத் தொடங்குவது சிறிது பயனுள்ள முயற்சியாகும். அதே சமயத்தில் 'பழமை விரும்பி' என்று ஒருவருக்குப் பட்டஞ் சூட்டும்பொழுது, எதிர்ப்பக்கத்தில் நிற்பவருக்கும் பழமைக்கும் எத்தகைய தொடர்பும் இல்லையென்னுங் கருத்துத் தொனிக்கிறது. அது சரியா? இல்லை! உண்மையில் ஒருவர் பழமையை விரும்புகிறார் என்பதல்ல முக்கியம்; பழைய கலை இலக்கியம் பற்றித் தவறான கருத்துக்கள் கொண்டிருக்கிறார் அல்லது பழம்பெரும் படைப்புக்களைத் தவறாக விளங்கிக்கொண்டிருக்கிறார் என்பதே மனங்கொள்ள வேண்டியதாகும். அதற்குப் பழைய இலக்கியங்களிற் காலத்தாற் சாகாத கருத்துக்கள் எவையெவை என்பதும் மனிதனை வாழ்விக்கும் கருத்துக்கள் எவ்வாறு கூறப்பட்டுள்ளன என்பதும் எமக்குத் தெளிவாயிருத்தல் அத்தியாவசியம். பழைய இலக்கியங்களெல்லாம் பவித்திரமானவை என்னும் கருத்து மூடநம்பிக்கையாயின், அதன் மறுதலையும் மூட நம்பிக்கையேயாகும்.

## பழைய கனவும் புதிய நனவும்

வையத்தில் மனிதருக்கு விடுதலையும், நல்வாழ்வுஞ்சகலவிதமான இன்பங்களும் கைவசப்படல் வேண்டும் என்னுங் கனவு தொன்றுதொட்டே விழையப்பட்டுள்ளது. எமது பண்டைய இலக்கியங்கள் இவ்வுண்மைக்கு விதிவிலக்கல்ல. வரலாற்றுப் போக்கிலே எமது இலக்கியத்தில் முற்போக்கான புரட்சிகரமான — மக்களையளாவிய சனநாயகக் கருத்துக்கள் ஏன் தோன்றின என்றும், எப்படித்தோன்றின என்றும் பின்னர் எப்படி வலுவிழந்தன என்றும் தெள்ளத் தெளிவாக உணர்வது இலக்கிய ஆசிரியனுக்கு இன்றியமையாதது. ஒவ்வொரு காலப் பகுதியிலும் ஆட்சி பீடத்திலிருக்கும் ஆளும் வர்க்கம் மனிதரின் உணர்வையும் சிந்தனையையும் தனது ஏகேச் சாதிகாரத்துக்கு ஏற்பப் பயன்படுத்த முனைகின்றது. புரட்சிகரமான உணர்வுகளை வளைத்தும் சுளித்தும் திசை திருப்பியும் முடியுமாயின் அடக்கியும் வழிநடத்துகின்றது. ஆனால் இம்முயற்சிகளையெல்லாம் உதறித்தள்ளிக் கொண்டு நசுக்கப்படும் மக்கள் முன்னேறுகிறார்கள். அவர்களின் இதயச்சுமையும் உடல் வருத்தமும் சிலரின் இலக்கிய வாயிலாகக் கனிகின்றது. வணிகவர்க்கத்தின் பிடியிற் சிக்கிப் பிறமொழி, பரசமயம் ஆகியவற்றைப் பின்பற்றிப் பொது மக்களின் நல்வாழ்வைக் கவனியாத பல்லவ மன்னனின் கட்டளையை உதாசீனஞ் செய்து 'யாமார்க்குங் குடியல்லோம்; நமனையஞ்சோம்' என்று புரட்சிக்குரல் எழுப்பிய அப்பர் தனது காலத்து முற்போக்கான அணியில் நின்றவரே யாவர். வரலாற்று வளர்ச்சியில் சதா காணப்படும் இது போன்ற எண்ணற்ற முரண்பாடுகளெல்லாம் வர்க்கப்போராட்டத்தினடிப்படையிலேயே தோன்றுவனவே. இப்போராட்டமே வரலாற்றை இயக்கும் சத்தியாகும். இந்நிலையில், பழைய இலக்கியங்களைத் தள்ளி வைத்தால் காலூன்ற இடமின்றி ஆகாயத்தில் மிதப்பவராகி விடுவோம். முதலாளித்துவ தத்துவ வாதிகளும் அறிஞர்களும் பழம் பெருமையைக் கூண்டிலடைத்து வைத்துக் காட்டுபவர்கள் என்று ஓரிடத்தில் ஸ்டாலின் கூறியுள்ளார். கூண்டிலடைத்துள்ளனர் என்பதற்காக நாமும் அதனைப் புறக்கணிக்க முடியுமா? அவர்களின் பின்னோக்குச் சிறையிலிருக்கும் பழைய செல்வங்களை எமதாக்கி முன்னோக்கிச் செல்பவருக்குத் துணையாக்குதல் வேண்டும்.

## இலக்கியங்களும் வர்க்க வேர்களும்

பழைய சமுதாயங்களில் இலக்கிய கர்த்தாக்கள் கண்ட கனவுகள் பெருமளவிற் கனவுகளாகவே இருந்தன. முதலாளித்துவ சகாப்தத்திலே, வர்க்கபோதம் நிறையப் பெற்ற தொழிலாளரும, விவசாயிகளும், முற்போக்கணியைச் சாரும் சிந்தனையாளரும் பிறரும் கனவை நனவாக்கும் அமைப்பு முறைகளையும், தத்துவப்படைக்கலத்தையும் மக்கள் சக்தியையும் கைவரப் பெற்றுள்ளமையால், புதியதொரு சமுதாயத்தை அமைப்பது சாத்தியமாயுள்ளது.

'காற்றிலேறி விண்ணையுஞ் சாடுவோம், சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்' என்றெல்லாம் பாரதி போன்ற கவிஞர் கண்ட கனவுகள் விஞ்ஞான வளர்ச்சியால் நாளடைவிலே நடைமுறை சாத்தியமாகி வருவதைப்போல 'பசியும் பிணியும் இன்றி வசியும் வளனும்' நிறைந்த சமுதாயக்கனவுகள் மாக்சிச-லெனினிசத் தத்துவ நெறியால் உண்மையாக்கப் பட்டுவருகின்றன. ஆமாம்! பழைய கனவுகள் புதிய பொருள் பெறுகின்றன.

பழைய இலக்கியங்களையும் புதிய படைப்புக்களையும் மாறுகொள வைத்து ஒப்பு நோக்காமல் இரண்டனுக்கும் ஊடாக இழையோடி வரும் ஒற்றுமைச் சுருதியைத் தெளிவாக்குதல் அவசியம். அப்பொழுது பழமைவிரும்பியின் கண் புதுமையைக் காணக் கூசாது. இது நடைபெறுவதற்கு இரண்டு வழியுண்டு. ஒன்று, பழைய இலக்கியங்களின் வர்க்கவேர்களைக் கண்டறிந்து அவற்றின் அரசியற் சமூக அமைப்பு முறைகளைத் தெளிவாக்கி அவற்றிக்குப் பாதகமாகவோ சாதகமாகவோ பல்வேறு படைப்புக்கள் தோன்றியுள்ளமையைத் தருக்க முறையிற் காட்டுதல் வேண்டும். இரண்டு பழைய இலக்கியங்களின் குறை நிறைகளைத் தராசில் நிறுத்திக் குறைபாடுகளை எவ்வாறு எமது கால மாற்றங்களினால் நிறைவாக்க முடியுமென்பதை நிலைநாட்டவேண்டும். இதன் விளைவாகப் பண்டையப் புலவர் பலரும் இன்றைய எழுத்தாளனுக்குமுள்ள வாய்ப்பு வசதி வேறுபாடுகள் புலனாகும் உதாரணமாக, இடைக்காலத்திலே வாழ்ந்த காளமேகப் புலவர், படிக்காசுப் புலவர், இரட்டையோர் முதலியோர் தத்தங்காலத்துச் சமூக நிறுவனங்களைக் கிண்டல் செய்தும், உயர்சாதிக்காரர், தலைமைக்காரர், ஆட்சியாளர் முதலியோரை நையாண்டிசெய்தும் பல பாடல் எழுதியுள்ளனர். அன்ன சத்திரத்தை நடத்துபவர் செய்யும் தகிடுதத்தத்தையும், ஏழை விவசாயிகளைப் பண்ணைக்காரர் நடத்தும் அதிகார முறையையும், விபசாரம் ஆணையும் பெண்ணையும் மிருக நிலைக்கு இழிவுபடுத்தும் அவலத்தையும் வரட்டுக் கவுரவம் போலிப்பகதி முதலியவற்றின் பரிதாபகரமான நிலைமையையும் வரண்டு வாடிய மலட்டுப் பாண்டியத்தியத்தினதும் செப்பிடுவித்தைப் புலமையினதும் திசையறியாத் தயக்கத்தையும், பிறவற்றையும் இப்புலவரின் படைப்புக்களிலே உய்த்துணரலாம். இன்றைய எழுத்தாளன் மேற்கூறிய புலவரின் வழித்தோன்றலே. அவர்களைவிட இன்றைய எழுத்தாளனுக்கு வாய்ப்பும் வசதியும் நிரம்ப உள்ளன. அவர்கள் தனிப்பட்ட முறையில் வெந்து வெம்பிய உள்ளக் குமுறல்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் குறிப்புரையாகவும் இலக்கியங்களிற் படைத்தனர். இவற்றையெல்லாம் அறியும் இன்றைய எழுத்தாளனுக்குக் கூட்டு முயற்சியின் அநுபவமுண்டு; மாக்சிஸம்-லெனினிசம் காட்டும் சித்தாந்த ஒளியுண்டு, உலகப் புரட்சியின் படிப்பினைகள் உள்ளன. நவயுகத்தின் அத்தனை வாய்ப்புக்களுமுள. எனவே தனிமையில் கூனிக் குறுகாமல் நிமிர்ந்து நடக்க நெஞ்சத்தைரியமுண்டு. ஆனால் அன்றைய எழுத்தாளன் விட்ட குறையைத்தொட்டாலன்றி தொடக்குநிலை தெளிவாகாது. புதுமையிலக்கியம் படைப்பவர்கள் சங்கிலிப் பின்னல் போல வளர்ந்துள்ள மனிதாபிமானப் பண்பின் உரிமைக்காரர் என்பதை உணரவேண்டும். மரபுமரபாக இலக்கியம் படைத்த பெருமக்களின் பணியானது விளலுக்கு இறைத்த நீரல்ல. அது மக்களின் உரிமையாகி விட்டது. அது எமது முன்னோர் அளித்த அருஞ் செல்வம். அதனைப் பழமைபெருமை என்னும் இன-மொழி-மதச் சிறையில் பூட்டித் தனியுரிமை கொண்டாட எவருக்கும் உரிமையில்லை. பொதுச் சொத்து உண்மையில் பொதுவுடமையாக வேண்டும்.

## அரசியலும் இலக்கியமும்

வரலாற்று அடிப்படையிலே, நோக்கும் பொழுது காலப்பகுதிகளிலெல்லாம் அரசியல் இலக்கியத்தைப் பந்தித்துப் பாதித்துள்ளமை புலனாகும். 'மனிதன் ஓர் அரசியல் ஜீவன்' என்று பண்டைய கிரேக்க தத்துவஞானியான அரிஸ்தோத்தல் கூறினான். அரசியல் மக்களின் வாழ்க்கையைத் தழுவியுள்ளது. அதே நேரத்தில் மக்கள் அரசியலை உருவாக்கி வழி நடத்துகின்றனர். இவ்விரண்டுசக்திகளும் ஒன்றற்கொன்று இன்றியமையாத உறவுடையன. ஒருவர் அரசியலிலிருந்து விட்டு விடுதலையாகுவேன் என்பது புவியீர்ப்புச் சக்தியிலிருந்து விடுபடுவது போன்றதே. இலக்கிய கர்த்தாவிற்கும் அரசியலுக்கும் தொடர்புண்டா இல்லையா என்பது தேவையற்ற வீண்வாதம். எத்தகைய அரசியலில் எந்த அளவிற்கு ஈடுபாடு கொண்டுள்ளார் என்பதே பயன்விளைக்கும் கேள்வியாகும். பரணரிலிருந்து பாரதிதாசன் வரை, முரஞ்சியூர் முடிநாகராயரிலிருந்து முருகையன்வரை, எல்லோரும வகையிலும் அளவிலும் வேறுபாடுகளுடன் அரசியல் வட்டத்துள் இயங்குபவரே. இதனை நிலைநாட்டவேண்டியதில்லை, தானே புலப்படும் உண்மையாகும், இதனால் மேற்கூறிய புலவரெல்லாம் கேவலம் அரசியல்வாதிகள் என்று யாரும் கூறுவரோ? கூறமாட்டார்! கூறமாட்டாராகவே, அரசியலும் இலக்கியமும் முரணானவை என்னும் பிரமை வாதம் அடிபட்டுப் போகும்.

கார்ல் மாக்ஸ் எழுதிய 'கம்யூனிஸ்டு அறிக்கை' ஓர் அரசியல் சாசனம், வர்க்க பேதமுள்ள சமுதாய அமைப்பை மாற்றி வர்க்கபேதமற்ற எதிர்கால அறவுலகை அமைக்கக் கோரும் அறைகூவல். இதுயாமறிந்த செய்தி கம்பன் காட்டும் அயோத்தி வருணனை முடியாட்சியில், நிலப்பிரபுத்துவ சமூகஅமைப்பின் வரம்பிற்குள் பிணி வறுமை, கல்விக்குறை, மனத்துயர், ஏற்றத்தாழ்வு முதலியன இல்லாதிருக்க அவாவிய வெளிப்பாடு. கம்பன் கண்டது கனவு. கம்யூனிஸ்டு அறிக்கை அதனை நனவாக்க முடியும் என்று காட்டியது. கம்பன் அரசியல் வாதியா? கம்பனின் அயோத்தி வருணனைக்காக, அவனைக் கொள்ளவும் வேண்டாம், தள்ளவும் வேண்டாம். ஆனால் தனது காலத்து அரசியலிலிருந்து அவனால் விலகமுடியவில்லை என்னும் அடிப்படைஉண்மையை உணர்ந்தாற்போதும் 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதல்லால் வேறொன்றறியேன்' என்று மனங்குழைந்த ஞானியும், 'எம்கடன் பணிசெய்து கிடப்பதே' என்று கர்மவீரம் பேசிய நாவுக்கரசரும் தத்தங்காலத்தில் இலட்சிய வடிவிற் கனவு கண்டவரே. அவரெல்லாம்

(6-ம் பக்கம் பார்க்க)



பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு முடிவு பெறுகின்றது. அவருக்கு எமது தோழமை மிக்க நினைவு அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர் நினைவாக 1965ல் அவரால் எழுதப்பட்ட இக்கட்டுரையை இங்கே பிரசுரிக்கின்றோம்.

ஆ. குழு.

★ ஓராண்டு நினைவு ★

6-12-82 — 6-12-83

# சீனாவில் மாசேதுங் மறுக்கப்படுகிறாரா?

சமீபகாலமாக மேற்கத்திய நாடுகளில் இருந்து சீனாவை அவதானிக்கும் சிலர் மாஓவின் மறைவுக்குப்பின் சீனாவில் 'மாஓ மறுப்பு' கொள்கை கடைப்பிடிக்கப்படுவதாகப் பிரசாரம் செய்து வருகின்றனர். உண்மை நிலைமைகள் இவை ஆதாரமற்றவை என்பதையே எடுத்துக் காட்டுகின்றன.

வேறு சிலர் இம் 'மாஓ மறுப்பு' பிரசாரத்தை டெங் சியாபிங் அவர்களுடன் தொடர்புபடுத்துகின்றனர். இது மேலும் அபத்தமானதும் முட்டாள்தனமானதுமாகும்.

சுருங்கக் கூறின் டெங் சியாபிங் ஏனைய பாட்டாளி வர்க்கப் புரட்சிப் போராளிகளோடு சேர்ந்து, மாஓவின் வரலாற்றுப் பாத்திரத்தையும், மாஓவின் சிந்தனைகளைப் பின்பற்றுவதையும் - விருத்தி செய்வதையும் வலியுறுத்தி வருகின்றார். சமீபத்தில் வெளியான 'டெங்சியாபிங்கின் தேர்ந்த படைப்புக்கள்' என்னும் நூல் 'மாஓ மறுப்பு' பற்றிய கட்டுக்கதைகளைத் தகர்த்துள்ளது.

1977 ஏப்பிரல் 10 திகதி டெங் (அப்போது தனது பதவிப் பொறுப்புக்கு திரும்பாத நிலையில்) கட்சியின் மத்திய குழுவிற்கு எழுதிய கடிதத்தில் 'நாங்கள் தலைமுறை தலைமுறையாக மாஓசேதுங் சிந்தனையின் தெளிவானதும் விரிவானதுமான விளக்கத்தை ஏற்று-கட்சியையும் சோஷலிசத்தையும் வெற்றிகரமாக இட்டுச் செல்ல வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும்' என்று ஆலோசனை கூறினார்.

19-3-80-ல் அவர் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில் மாஓவின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பையும் அவரது சிந்தனைகளைப் பின்பற்றி வளர்த்தெடுக்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இதன் பின் 25-10-80ல டெங்சியாபிங் கூறுகையில் 'மாஓவின் சிந்தனைகள் நடைமுறையில் சரியானதென நிறுவப்பட்டுள்ளதால், எமது வருங்கால நடவடிக்கைகளுக்கு வழிகாட்டியாக அமைய வேண்டுமாதலால் இது கட்சியின் தீர்மானத்தில் இடம் பெற வேண்டும் எனவும் கட்சி இதனைச் செய்யத் தவறினால் வரலாற்று ரீதியான பெருந்தவறினை இழைப்பதாகவே இருக்கும்' எனவும் சுட்டிக் காட்டினார்.

'மாஓ பிற்காலத்தில் செய்த தவறுகளைச் சரியானபடியும், யதார்த்தமாகவும்

(8-ம் பக்கம் பார்க்க)

## தோழர் மாஓ சேதுங் அவர்களின் 90-வது பிறந்ததினம்

தோழர் மாஓ சேதுங் அவர்களின் 90வது பிறந்ததினம் இவ்வாண்டு டிசம்பர் 26ம் திகதியாகும். தோழர் மாஓ உயிருடன் இருந்த காலத்தில் ஒரு போதும் பிறந்ததின விழாக் கொண்டாடியதில்லை. இது அவருடைய விருப்பம் மட்டுமன்றி கட்சியினதும் கொள்கையாகும். அதாவது உயிருடன் இருக்கும் கட்சியின் எந்தத் தலைவரும் பிறந்ததின விழா நடாத்துவதில்லை. அதேபோல் எந்தத் தலைவரின் பெயரிலும் வீதியோ, கட்டிடமோ இருக்கக் கூடாது. இன்றும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி இந் நடைமுறையைக் கடைப்பிடித்து வருகின்றது.

தோழர் மாஓ சேதுங் அவர்களின் 90வது பிறந்ததினத்தை ஞாபகார்த்தம் செய்யும் வண்ணம் பல விஷயங்களை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி செய்துவருகின்றது. மாஓ சேதுங் சிந்தனை பற்றிய ஆய்வரங்கு ஒன்று பீஜிங்கில் நடாத்தப்பட்டது. ஐம்பது கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. மாஓவின் தேர்ந்தெடுத்த கடிதங்களின் தொகுப்பு வெளிவர உள்ளது. பத்திரிகைகள், சஞ்சிகைகள் கட்டுரைகளையும், பேட்டிகளையும், புகைப்படங்களையும் பிரசுரித்துள்ளன. இவையாவும் சீனாவில் மாஓ மறுக்கப்படுகிறார், மறைக்கப்படுகிறார் என்ற சீன எதிர்ப்பு வாந்திக்காரர்களின் கீழ்த்தரப் பிரசாரங்களை எல்லாம் நடைமுறையில் மறுத்துள்ளதையே நிரூபிக்கின்றன.

எமது அடுத்த இதழில் மாஓவின் 90வது பிறந்ததின ஞாபகார்த்தக் கட்டுரைகள் இடம்பெறும்.

(ஆ-குழு)

# தமிழர் பிரச்சினையின்........

3-ம் பக்கத் தொடர்

யின் போலித்தனமும் அப்பட்டமாக்கப்படுகின்றதையே காணமுடியும்.

இதே போன்று தான் உத்தியோக மொழிப் பிரச்சினையும். சிங்களம் அரசாங்க மொழியாக்கப்பட்டதால் சிங்கள மக்களின் வேலை இல்லாத் திண்டாட்டம் ஒழிந்துவிடவில்லை. ஒரு மொழியை ஆட்சி மொழியாக்குவதன் மூலமோ அன்றி ஒரு இனம் ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதன் மூலமோ அந்த இனத்தின் வேலை இன்மை என்ற பிரச்சினையைத் தீர்க்க முடியாது. எத்தகைய பொருளாதார அமைப்புமுறை நடைமுறைப்படுத்தப் படுகின்றது என்பதிலேயே வேலை இல்லைப் பிரச்சினையின் தீர்வு தங்கியுள்ளது. எனவே கல்வியும் வேலை வாய்ப்பும் அடிப்படையில் பொருளாதாரப் பிரச்சினைகள் என்பது தெளிவாகிறது.

அடிப்படைக் காரணம் பொருளாதாரக்காரணமாக இருப்பதை மறைத்து அவர்களை இந்திய வம்சாவழித் தமிழர்கள் என்பதாலேயே தாம் அவ்வாறு நடத்துவதாகச் சிங்கள மக்களுக்கு ஆளுவோர் காட்டி இனவாதத்தின் மூலம் தம்மைப் பாதுகாத்துக்கொள்கின்றனர்.

மேற்கண்டவாறு கூறுமிடத்து இன உணர்வுகளின் தன்மைகளை எந்தவகையிலும் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்பது அர்த்தமல்ல. ஒரு இனத்தின் இன மொழி, கலாச்சார விடயங்களின் தனமைகளை பேணிப் பாதுகாத்து வளர்ப்பதற்கும்-அவற்றை ஒருவெறி நிலைக்குத் தள்ளிச் செல்வதற்கும் இடையில் சரியான வரையறுப்பு அவசியம் என்பதையே நாம் வற்புறுத்துகினறோம். உலகில் சகல விதமான இனவாதக் கோஷங்கள்-கோரிக்கைகளின் பின்னாலும் சொத்துடைய ஆளும் வர்க்கத்தின் பொருளாதார நலன் மறைந்து கிடப்பதையே காணமுடியும்.

கிட்லருடைய ஆரிய இனக் கோஷம், ஜாருடைய பேரினவாதம், சியோனிச வாதிகளின் யூத இனவெறி, தென்ஆபிரிக்க ஆளும் கும்பலின் வெள்ளை நிறவெறி கருணாநிதியின் சுத்தத் தமிழனின் ஆட்சி, சிறில் மத்தியூவின் சிங்கள இரத்தக் கொதிப்பு, அமிர் தலிங்கத்தின் ஆண்டபரம்பரைப் பேச்சு போன்ற சகல வித இனவாதங்களின் பின்னாலும் ஒரு பொருளாதார அடிப்படையும், ஆளும் வர்க்க நிலைப்பாடும் இருக்கவே செய்கின்றன.

ஒரு நாட்டின் தேசிய இனப் பிரச்சனையின் சிக்கலுக்கு அந்நாட்டின் ஏற்றத்தாழ்வான, தனிச் சொத்துடைமையை மையமாகக் கொண்ட பொருளாதார அமைப்பு அடிப்படைக்காரணமாக அமைவதைப் போல் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்குப் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான சோஷலிசப் பொருளாதார அமைப்பானது வழி விட்டுக் கொடுக்கின்றது. எனவே தேசிய இனப் பிரச்சினை முதலாளித்துவத்தின் கீழ் சிக்கலடைந்து தீர்க்கப்படாது விடப்படுவதற்கும், சோஷலிசத்தின் கீழ் இலகுவாகவே தீர்க்கப்படுவதற்கும் அடிப்படைக்காரணமாகப் பொருளாதார அமைப்பு முறையே அச்சாணியாகச் செயல்படுகின்றது.

இவ்விடத்தில் ஒரு விடயத்தை அழுத்திக் கூறுவது அவசியம். தேசிய இன ஒடுக்கு முறையில் இருந்து ஒரு இனம் உண்மையான விடுதலை பெற வேண்டுமாயின் அவ் ஒடுக்கு முறையின் அடிப்படையாக அமைந்துள்ள ஏற்றத்தாழ்வான, சுரண்டலும்—சூறையாடலும் கொண்ட, ஏகப் பெரும்பான்மையான மக்களுக்கு கொடுமைகளையும் அநீதிகளை விளைவிக்கின்ற சமுதாய அமைப்பை முற்று முழுதாக மாற்றும் வழியில் செயல்பட வேண்டும். அவ்வாறு செயல்படாது தனியே இன அடிப்படையில் விடுதலை என்று சென்றால் இன ஒடுக்கு முறையின் உருவம் மாற்றம் பெறுமே அன்றி அதன் உள்ளடக்கமான ஏற்றத்தாழ்வு கொண்ட சமுதாய அமைப்பு மாற்றம் அடையாது.

ஆதலால் எமது நாட்டின் தேசிய இனப் பிரச்சினையின் இறுதித் தீர்வானது பாட்டாளிவர்க்கத்தின் தலைமையிலான ஒரு புதிய ஜனநாயகப் புரட்சியின் வெற்றி மூலமும் அதை தொடர்ந்து நடைமுறைக்கு வரக் கூடிய உண்மையான சோஷலிசப் பொருளாதார அமைப்பின் உருவாக்கத்திலுமே தங்கியுள்ளது. இது பாட்டாளிவர்க்கத்தின் தலைமையில் ஏனைய உழைக்கும் மக்கள் முன்னெடுக்கும் புரட்சிகரப் போராட்டத்தினால் மட்டுமேசாத்தியமாகும். வேறு எந்த வர்க்கத்தினாலோ அன்றிப் பிரிவினாலோ இக்கடமையைப் பூர்த்தி செய்ய முடியாது.

★

## தோட்டத் தொழிலாளர் பிரச்சினை

இந்திய வம்சாவழித் தொழிலாளர்கள் பாகுபாட்டிற்கு உள்ளாக்கப்படுவது அவர்கள் இந்தியத் தமிழர்கள் என்பது மட்டும் ஒரு காரணமாகஇருக்கமுடியாது. ஈவிரக்கமற்ற சுரண்டலின் மூலம் தமது பொருளாதாரத் தேட்டங்களை தேடிக்கொண்ட வெள்ளை ஏகாதிபத்திய வாதிகளின் அடிச்சுவட்டையே இப்பொழுதும் ஆட்சியில் உள்ளோர் பின்பற்றுகின்றனர். அவர்கள் பல லட்சக்கணக்கில் ஒரே துறையில் வேலைசெய்வதால் சம்பள உயர்வோ அல்லது வீட்டு வசதியோ, ஏனைய சலுகைகளை அளிப்பது என்பது ஆட்சியினருக்கு பெரும் செலவீனத்தையே கொண்டுவரும் என்பதாலேயே அவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு மலையகப் பகுதிகளின் நிலம் வழங்காமையும் ஒரே லயக் காம்பராவில் வாழ நிர்ப்பந்திப்பதற்கும் காரணம் பொருளாதார அடிப்படைகளே ஆகும்.

## பழமையும் புதுமையும்

(5ம் பக்கத்தொடர்)

அரசியலிலிருந்து தூரப் போனவரல்லர்.

### பழமையைப் புதிய ஒளியில் பார்ப்போம்!

எனவே பழமையையும் புதுமையையும் இயைபு நோக்கி இணைத்து, அமைதி காணும் பொழுது அவ்விடத்திலே ஆதார சுருதியாகக் கேட்பது, சமூக பொருளாதார அரசியல் இயக்கக் குரல்களே. உதாரணமாகத் தீந்தமிழ்க்காப்பியமாம் சிலப்பதிகாரத்தை நோக்குவோம். முத்தமிழ் வளமும், காவிய நயங்களும் இலக்கிய உத்திகளும் பிறவும் பொதியப்பட்ட அப்பெட்டகத்தின் பெருமை அரசியலைத் தழுவியே அமைந்துள்ளது. 'மாதவி மடந்தை கானற் பாணி கனகவிசயர்தம் முடிதலை நெரித்தது' என்று இளங்கோபாடுகையில் கானல் வரிக்கும் அரசியற் செய்தியான வடநாட்டுப் போருக்கும் உள்ளபிணைப்புத் தெரிந்துவிடுகின்றது. அதுமட்டுமன்று இளங்கோவடிகளே தனது காப்பியத்தின் நோக்கங்களை விபரிக்கும் பொழுது 'அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவ' தனைக் காட்ட முனைந்தேன் என்கின்றார். இளங்கோ கேவலம் அரசியற் பிரசாரகர் என்று எவரும் கூறுவரோ? இஃதிவ்வாறிருக்க சிலப்பதிகாரத்தை 'முத்தமிழ்ச்' சிறையில் அடைத்து மகிழும் பழமை விரும்பிகளை ஒருபுறம் விட்டு விட்டு நாமே அதன் உண்மையான உரிமையாளர் என்பதனை உணர்ந்தால், காவியாசிரியர் இளங்கோவைப்போல நமது கால இலக்கியகர்த்தாக்களும் 'குடிமக்கள் காப்பியம்' படைக்கலாமன்றோ! முடியரசரின் அந்தரங்க வாழ்வையும், பகிரங்க வாழ்வையும் நடுவிலிருந்து கண்டறிந்த அவர், அரசின் அறப்பிறழ்வைக் காட்டினாரென்றால். மக்கள் மத்தியில் வாழக்கூடிய இன்றைய எழுத்தாளன் அரசாங்கங்களின், கட்சிகளின், வர்க்கத்தின் - நெறிப்பிறழ்வை நேரிதாகச் சித்திரிக்கலாமன்றோ! இந்தவிடத்தில் மா-சே-துங் கலை இலக்கியம் பற்றிக் கூறியது பொருத்தமாகும். 'நமது நாட்டிலும் பிறநாடுகளிலும் சென்ற காலத்திற்றோன்றிய கலை இலக்கியப் படைப்புக்கள் நதி மூலமன்று; பிரவகித்துவரும் பேராறு. முதாதையர் அவரவர் காலத்து மக்கள் வாழ்விலே காணப்பட்ட கலைப் பண்புகளிலிருந்து படைத்த இலக்கியச் செல்வங்களை எமதாக்குவதுடன், அவற்றைத் திறனாய்ந்து தெளிந்து அவற்றுட் குணமிக்கவற்றைக் கொண்டு, நாமும் எமது காலத்து மக்கள் வாழ்விற் காணப்படும் கலைப்பண்புகளைச் சிறந்த படைப்புக்களாக்குதல் வேண்டும்.'

பழைய இலக்கியங்களை அணுக இதைவிடச் சிறந்த மார்க்கம் இருக்கமுடியாது. பொருள் உற்பத்திச் சாதனங்களையும் அதன் வழியாகப் பெறும் அரசியல் ஆதிக்கத்தையும் முதலாளித்துவ வர்க்கத்தினின்றும் மீட்டெடுத்துப் புதிய சமுதாய உறவுமுறைகளையமைத்து, வரலாற்றை மாற்ற முனையும் பெரும்பணியின்—உலகப்புரட்சியின் ஓர் அங்கமே இலக்கியப் போராட்டம். பழைய இலக்கியங்களின் காவலர்கள், பாதுகாப்பாளர்-என்று தம்மைத்தாமே கூறிக்கொள்பவர்கள் அவற்றைச் சிறையிலடைத்ததன் காரணமாக— உரிமையிழந்துவிட்டனர். நிகழ்காலத்தை உருவாக்குபவனே சென்ற காலத்துக்குச் சொந்தக்காரனாகிறான். இது வரலாற்று நியதி. இவ்வுண்மையை மனதிற்கொண்டு, 'வாழையடி வாழையென வந்ததிருக் கூட்ட மரபில் யானுமொருவனன்றோ' எனப் பாடிய வள்ளலார், பாரதி முதலியோரைப் போல நாமும், 'கலை கலைக்காக' என்னும் விரக்திக் கீதம் இசைப்பவரை விட்டுவிட்டு, மார்க்சிஸ லெனினிசத்தின் ஒளியில் பழமையைப் போற்றுவோமாக. 'நமக்குத் தொழில் கவிதை; நாட்டிற்குழைத்தல்; இமைப்பொழுதுஞ் சோராதிருத்தல்,★

# கிரனேடாதீவும் அமெரிக்க ஆக்கிரமிப்பும்

சிறிய நாடுகளின் அரசியல் சுதந்திரம் என்பது பெருவல்லரசுகளைப் பொறுத்தவரை அர்த்தமற்ற ஒன்று என்பதை அமெரிக்காவும் சோவியத்யூனியனும் போட்டி போட்டுக்கொண்டு நிரூபித்து வருகின்றன.

மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்ருன கிரனேடா என்பது பிரிட்டிஷ் பொதுநல நாடுகளில் ஒன்று. அங்கு சில வாரங்களுக்கு முன்னர் ஒரு ராணுவப் புரட்சி நடந்ததை அடுத்து அமெரிக்க அரசாங்கம் திடீரென்று ஒரு ஆக்கிரமிப்பை நடத்தியது. இப்போதைக்கு அமெரிக்கப் படைகள் அங்கிருந்து வெளியேறுவது சாத்தியமல்ல என்பதும் தெளிவாகியுள்ளது.

கிரனேடாவில் தூக்கியெறியப்பட்டது ஒரு அமெரிக்க சார்பு ஆட்சியுமல்ல. இந்த ஆக்கிரமிப்பை நியாயப் படுத்துமாறு அங்கே எதுவுமே நடக்கவும் இல்லை. ஏற்கனவே கியூபாவின் செல்வாக்கு அதிகமாக இருந்த ஒரு ஆட்சிக்குள் மேலும் கியூபாவின் ஆதரவான ஒரு பகுதியினர் நடத்திய ஒரு கிளர்ச்சிமூலம் ஆட்சி கைமாறியது. அமெரிக்கா தன் தலையீட்டை நியாயப் படுத்த சில மேற்கிந்தியத் தீவுகளின் ஆட்சியினரது விருப்பத்தை ஆதாரமாகக் காட்டியுள்ளது. எனினும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் எடுபிடி நாடுகளான சிங்கப்பூர் போன்ற பல நாடுகள்கூட அமெரிக்க ஆக்கிரமிப்பை வன்மையாகக் கண்டித்துள்ளன. ஆயினும் அமெரிக்காவின் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் ஏற்படும் என எதிர்பார்க்க நியாயம் இல்லை. எந்தவொரு ஏகாதிபத்தியத்தின் செவியிலும் நியாயத்தின் குரல் விழுவது கிடையாது.

அமெரிக்காவின் கைப் பொம்மை நாடுகள் கூட இந்தத்தலையீட்டையிட்டு அஞ்சுவது விளங்கிக்கொள்ளக் கூடிய ஒன்றே. இவ்வாருன தலையீடு நம் சூழலில் ஏற்படுமாயின் அது தமது ஆளும் வர்க்கங்களது நலன்கட்குச் சாதகமான ஒன்ருக இல்லாமல் இன்னெரு பெருவல்லரசின் ஆதரவு சக்திகள் மூலம் நடத்தப்படும் ஒன்ருக இருக்கும் வாய்ப்பை அவர்கள் உணர்கிருர்கள். கம்பூச்சியாவும் ஆப்கானிஸ்தானமும் இன்னும் கண்முன் நிற்கின்றன.

ஆப்கானிஸ்தானில் தன் கைகளைக் கறைபடுத்திக் கொண்ட சோவியத் யூனியன் மட்டுமன்றி போக்லாந்து யுத்தத்தில் தன் பழைய ஆக்கிரமிப்பு ரூபத்தை மறுபடியும் வலியுறுத்திக் கொண்ட பிரிட்டனும் கூட இந்த அமெரிக்க நடவடிக்கையைக் கண்டிப்பது உலகம் மாறி வருகிறது என்பதையே காட்டினுலும், சிறிய நாடுகளது வலிமை முழுக்கவும் அவற்றின் ஒற்றுமையில் மட்டுமே தங்கியுள்ளது என்பதையே அண்மைய கால வரலாறு காட்டுகிறது.

அமெரிக்கா தான் ஒரு பெருவல்லரசுதான் என்பதை மீண்டும் சோவியத் யூனியனுக்கு நினைவூட்டியதைவிட இச்செயலால் எதையுமே சாதித்துவிடவில்லை. இந்த ஆக்கிரமிப்பு, அமெரிக்க ஏகாதிபத்தியம், தானே தன் கால்களில் மாட்டிக்கொண்ட ஒரு புது விலங்கே ஒழிய வேறில்லை.

## கம்பூச்சிய மக்களின் போராட்டத்திற்கு உலக மக்களின் ஆதரவு!

ஜனநாயக கம்பூச்சிய நாட்டிற்குள் 1979ம் ஆண்டு மார்கழியில் ஒரு லட்சத்திற்கு அதிகமான வியட்னும் படைகள் ஆக்கிரமிப்பில் இறங்கின. பதவியில் இருந்த அரசிற்குப் பதிலாக கெங்சமறீன் என்ற கைக் கூலியின் தலைமையில் ஒரு பொம்மை அரசு நிறுவப் பட்டது. வியட்னுமின் கேடுகெட்ட இவ் ஆக்கிரமிப்பை சோவியத் யூனியன் பின்னுல் இருந்து இயக்கியது. விரல் விட்டு எண்ணக் கூடிய சோவியத்ஆதரவு நாடுகள் சிலவே இப் இப் பொம்மை ஆட்சியை அங்கீகரித்தன. ஆனுல் உலகின் பெரும் பான்மையான நாடுகளும் மக்களும் ஜனநாயக கம்பூச்சிய அரசையே சட்டபூர்வமான கம்பூச்சிய அரசாக அங்கீகரித்துள்ளனர்.

அதன் அடிப்படையில் ஐ. நா. சபையிலும் ஏனைய உலக ஸ்தாபனங்களிலும் ஜனநாயக கம்பூச்சியாவே சட்டபூர்வமான அரசாக அங்கீகாரம் பெற்றுள்ளது. ஒன்றரை லட்சத்திற்கு அதிகமான வியட்னும் துருப்புக்களை அங்கிருந்து வெளியேறுமாறு ஐ. நா. வின் அண்மைய கூட்டத் தொடரில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத் தீர்மானத்திற்கு ஆதரவாக 105 நாடுகள் வாக்களித்தன. இருபத்திமூன்று நாடுகள் (அவை சோவியத் அடிவருடி நாடுகளே) எதிராக வாக்களித்தன. பத்தொன்பது நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. இவ்வாக்களிப்பு வியட்னுங் ஆக்கிரமிப்பாளர்களுக்கு பலத்த அடியாகவே இருக்க முடியும். உலக நாடுகளின்—மக்களின் உண்மையான ஆதரவு ஜனநாயக கம்பூச்சிய அரசுக்கும் மக்களுக்குமேயாகும்.

வியட்னும் ஆளும் கும்பல் இன்று சோவியத மேலாதிக்கத்தின் தென்கிழக்காசியச் சேவகனுகவே வேலைசெய்து வருகின்றது. பிராந்தியமேலாதிக்க வெறிகொண்டு அலையும் வியட்னும் கம்பூச்சியாவில் காலைப்புதைய விட்டதனுல் ஆபத்துக்குள் மாட்டிக்கொண்டுள்ளது. வியட்னும்—லாவோஸ் கம்பூச்சியா ஆகிய மூன்று நாடுகளையும் கொண்ட இந்தோசீன சமஷ்டி என்ற பெயருடன் தமக்கு ஆசியாவில் கால்பதிக்க ஒரு இடம் தேடும் முயற்சியாகவே வியட்னுமை சோவியத் யூனியன் முன்னுக்குத்தள்ளி கம்பூச்சியாவை ஆக்கிரமிக்கச்செய்தது. அதுவே வியட்நாமிற்கு பெரும் பொருளாதார இராணுவத் தோல்விகளைக் கொண்டுவந்துள்ளது. அத்துடன் வியட்னுமுக்கு இருந்து வந்த நல்லபெயரானது உலகமக்களால் கைவிடப்பட்ட ஒன்ருகிவிட்டது. அதேவேளை கம்பூச்சிய மக்களின் நீதியான போராட்டம் நாளாந்தம் முன்னேற்றத்துடன் உலக மக்களின் பேராதரவையும் பெற்றுவருகிறது.

## இரண்டு வல்லரசுகளும் அவற்றின் மேலாதிக்கமும்

இரண்டு மேலாதிக்க வல்லரசுகளான சோவியத் யூனியன் அமெரிக்கா ஆகிய இரண்டும் உலக மேலாதிக்கத்திற்காக ஒன்றுடன் ஒன்று போட்டி போடுகின்றன. உலக நாடுகளில் ஊடுருவல், ஆட்சிக் கவிழ்ப்பு, ஆக்கிரமிப்பு என்பவற்றை பகிரங்கமாகவே இவ்விரு நாடுகளும் நடத்தி வருகின்றன. இதில் சிரிப்புக்கு இடமானதும் கவலைப்பட வேண்டியதும் என்னவெனில் ஒன்றை ஒன்று ஆக்கிரமிப்பாளன் எனக் குற்றம் சாட்டுவதாகும். வியட்னுமில் அமெரிக்கா ஆக்கிரமிப்புச் செய்ததை சோவியத் யூனியன் குற்றம் சாட்டியது. அதே சோவியத் யூனியன் செக்கோஷ்லவிக்கியாவில் தனது படைகளைக் கொண்டு சென்று ஆக்கிரமிப்பை நடத்தியது. அதே போல் தென் அமெரிக்க நாடுகளில் அமெரிக்கா தலையிடுவதாகவும், அண்மையில் கிரனடாவில் ஆக்கிரமிப்புச் செய்துள்ளதாகவும் ஓலம் வைக்கும் சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் துருப்புக்களையும் யுத்த தளபாடங்களையும் வைத்து ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ளது.

இவ்வாறு இரண்டு வல்லரசுகளும் மாறி மாறி ஒன்றை ஒன்று குற்றம் சாட்டிக் கொண்டு உண்மையில் உலக நாடுகளை தத்தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரவே முயலுகின்றன. பாசிச—இடதுசாரி—கம்யூனிச அபாயத்தில் இருந்து பாதுகாப்புக் கொடுக்கவேதான தலையிடுவதாக அமெரிக்கவும் ஏகாதிபத்திய முதலாளித்துவ சக்திகளுக்கு எதிராகப் புரட்சிகர சக்திகளைப் பாதுகாப்பது தனது கடமை என்று சோவியத்யூனியன் தலையிடுவதும் இன்றைய நடைமுறையாகி உள்ளது. உண்மை இதுவல்ல.

ஒரு நாட்டு மக்கள் தமது தலைவிதியை முதலாளித்துவமாகவோ அன்றி சோஷலிசமாகவோ தீர்மானிப்பதற்கு அவர்களிடமே விட்டுவிட வேண்டும். அவர்கள் முதலில் முதலாளித்துவத்திடம் தங்களை ஒப்படைத்தால் விரைவிலேயே அதற்கு எதிராகக் கிளம்பி சோசலிசத்தின் பக்கம் வரவே செய்வர். அதற்கு சோஷலிசமோ அல்லது அதைக் கொண்டு வரும் புரட்சியோ எச்சந்தர்ப்பத்திலும் ஏற்றுமதிப்பண்டமாக இருக்க முடியாது. அதேபோல் ஒரு நாட்டு மக்கள் புரட்சியின் மூலம் நிர்ணயிக்கும் தமது நாட்டின் தலைவிதியை ஏகாதிபத்தியமோ முதலாளித்துவமோ தடுப்பதற்கும் அல்லது தலையிடுவதற்கும் எவ்விதத்திலும் தகுதியற்றதுமாகும்.

ஆதலால் தான் சீனு போன்ற உண்மையான சோஷலிச நாடுகள் ஏனைய நாடுகளின் தேசிய சுதந்திரம், தன்னுதிக்கம் இறைமை என்பனவற்றில் எவ்விதத்திலும் தலையிடுவதில்லை அத்துடன் மேலாதிக்க வல்லரசுகளின் தலையீடுகளையும் தீவிரமாக எதிர்க்கின்றன. இதனுலேயே சீனு எங்கிருந்து மேலாதிக்கம் வந்தாலும் அதை எதிர்ப்பதில் உலக மக்களுடன் சேர்ந்து முன்னணியில் நிற்கிறது. மேலாதிக்கத்தைப் பொறுத்தவரை சீனு ஒருவல்லரசுக்கு எதிராக மற்ருென்றுடன் இணைதல் என்ற நிலையை தீர்க்கமாகவே எதிர்த்து தனது சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையில் உறுதியாக இருந்து வருகின்றது. சீனுவின் சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையானது மூன்ரும் உலக நாடுகளுக்கும மக்களுக்கும் பெரும் ஆதர்சமாகவும் விளங்குகின்றது.

5-ம் பக்கத் தொடர்

### எங்கிருந்து தொடங் ...

வெகுஜனச் சீற்றத்தை ஆதரிக்க வேண்டியிருக்கும்; பகிஷ்காரம், பொதுக் கண்டனம், ஆர்ப்பாட்டங்கள் முதலியவற்றின் மூலமாக அவனை வெளிப்படையாகப் பின்வாங்கும்படி கட்டாயப்படுத்தி அவனுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டியிருக்கும். போருக்கு இவ்வளவு தயாராயிருக்கும் நிலையை, ஒழுங்கான படையணிகளது நிலையான நடவடிக்கையின் அடிப்படையில் மட்டும் தான் அடைய முடியும். பொதுவான செய்தித்தாளை நடத்தும் நோக்கத்திற்காக நம் சக்திகளை நாம் ஒன்று திரட்டினுல், அந்த வேலை அதிகத் திறமை வாய்ந்த பிரசாரங்களுக்கு மட்டுமல்லாமல், மிகவும் திறமை வாய்ந்த அமைப்பாளர்களுக்கும் கட்சியின் அதிகத் திறன் படைத்த அரசியல் தலைவர்களுக்குத் தேவையான பயிற்சியளிக்கும், அவர்களை முன்னணிக்குக் கொண்டுவரும். அவர்கள் தக்க தருணத்தில் தீர்மானமான போருக்காக அழைப்பு விடுக்கவும் அதற்குத் தலைமை தாங்கவும் முடியும்.

இறுதியாக, வரக் கூடிய தப்பெண்ணத்தைத் தவிர்ப்பதற்காகச் சில சொற்கள் கூறுவோம். முறையானதிட்டமிட்ட தயாரிப்பைப் பற்றியே எப்போதும் பேசி வருகிருேம். ஆனுல், சரியான முற்றுகை அல்லது நன்கு ஒழுங்கமைந்த தாக்குதல் மூலமே எதேச்சாதிகாரம் வீழ்ந்து ஒழியும் என்று உட்குறிப்பாக உணர்த்துவது நம்முடைய விருப்பமல்ல. அத்தகைய கருத்து முட்டாள்தனமாகவும் புத்தகப்புழுவுக்குரியதாகவும் இருக்கும். அதற்கு மாருக, எல்லாப் பக்கங்களிலிருந்தும் இடைவிடாமல் அச்சுறுத்தும் தன்னியல்பாகத் தோன்றும் திடீர் வெடிப்புகளில் ஒன்றின் நிர்ப்பந்தத்தாலோ, எதிர்பாராத அரசியல் சிக்கல்களின் நிர்ப்பந்தத்தாலோ எதேச்சதிகாரம் தகர்ந்து ஒழியும் என்பது முற்றிலும் சாத்தியமானது. வரலாற்றுப் போக்கில் அதிக வாய்ப்புள்ளது. ஆனுல் யோசனையற்ற முரட்டுத் துணிச்சலான செயல்களில் வழுக்கி விழுவதைத் தவிர்க்க விரும்பும் எந்த அரசியல் கட்சியும் மேற்சொன்ன திடீர் மலடிப்புக்களையும் சிக்கல்களையும் பற்றிய நம்பிக்கையின் அடிப்படையில் தன் நடவடிக்கையை அமைத்துக் கொள்ள முடியாது. நம் வழியே நாம் போகவேண்டும். நம்முடைய முறையான வேலையில் ஒரே விடாப்பிடியாக ஈடுபட வேண்டும். எதிர்பாராத நிகழ்ச்சிகள் மீது எவ்வளவு குறைவாக நாம் நம்பிக்கை வைக்கிருேமோ, அவ்வளவுக்கு 'வரலாற்றுத் திருப்பங்கள்' நம்மைத் திகைக்கச் செய்ய மாட்டா என்ற உறுதி அதிகமாகும். ★

முற்றும்.

## விடுதலைப் போராளிகள் தங்களை தாங்களே அழிப்பதா?

லெபனுனில் அமைதி என்ற சொல்லுக்கே இடமில்லை என்ருகிவிட்டது. இஸ்ரேலிய தலையீட்டின்றும் தென்லெபனுனில் இஸ்ரேலிய ராணுவத்தின் பிரசன்னத்திலின்றும் விடுபடுவதற்கு லெபனுன் திணறும் அதே சமயம், அங்கே சிரியாவினதும் லிபியாவினதும் ஆதரவுடன் பலஸ்தீன விடுதலை இயக்க முகாமுக்குள் இரத்தக் களரி ஏற்பட்டு வருகிறது.

அராபியர்களை அராபியர்களே அழிக்கும் நிலையின் உச்சக் கட்டமாக பலஸ்தீன விடுதலைப் போராளிகள் தம்மைத்தாமே அழித்துக்கொள்ளும் நிலவரம் உருவாக்கப் பட்டுள்ளது. பலஸ்தீன மக்களது விடுதலை இயக்கத்திலுள் 1917 சொச்சங்களின்போது சாதிக்கப்பட்ட ஒற்றுமையை விடுதலை இயக்கங்கள் மீது செல்வாக்குள்ள தனி நாடுகள் ஒவ்வொன்றும், தம் செல்வாக்கை விரிவுபடுத்தவேண்டி அழித்துவருகின்றன.

இதனுல் பலப்படுவது எதிரியாகிய சியோனிஸமும்

(6ம் பக்கம் பார்க்க)

# தோ. தொழிலாளரிடமும் புனருத்தாரண வரியா?

## சம்பள உயர்வு மறுப்பு; வரி விதிப்பு மட்டும் ஏன்?

எதிர்வரும் தைமாதத்தில் இருந்து சகல அரசாங்க தனியார் ஊழியர்களிடம் இருந்தும் ஒரு சதவீத புனருத்தாரண நிதி அறவிடப்படவுள்ளது. மக்களின் மீது சுமை எதுவும் சுமத்தாத யூ. என். பி வரவு செலவுத் திட்டத்தின் முடிவு இதுவாகும். வரவு செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வை எதிர்பார்த்த மக்களுக்கு புனருத்தாரண நிதி பற்றிய அறிவிப்பு ஒரு அதிர்ச்சியாகும்.

ஒரு நியாயமான புனருத்தாரணத்திற்கு வரி மூலம் நிதி கொடுப்பதை யாருமே ஆட்சேபிக்க மாட்டார்கள். ஆனால் யூலை இனவாத வன்செயல்களுக்கும் மக்களுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. அது ஒரு இயற்கை அழிவும் அல்ல. ஒரு கட்டத்தின் திட்டமிட்ட இனவெறியாட்டமேயாகும். அதில் பங்கு பற்றியவர்கள் மட்டுமன்றி அதற்குத் திட்டமிட்டு வழி நடத்தியவர்களே மோசமான குற்றவாளிகள். அவர்கள் எந்த உயர்மட்டத்தில் இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. அத்தகையோரிடம் இருந்து அறவிட வேண்டியதை அறவிட்டால் மக்கள் சந்தோஷப்படுவார்கள். அதை விடுத்து அரசாங்கம் தன் தவறை ஈடு செய்ய மக்களின் தலை மீது வரிச் சுமையை சுமத்துவதை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இப் புனருத்தாரண நிதி வசூலிப்பதில் முக்கிய விடயம் என்னவெனில் தோட்டத் தொழிலாளர்களிடமும் இவ் வரி வாங்கப்படவுள்ளது. தோட்டத் தொழிலாளர்கள் நடந்து முடிந்த இனவெறியாட்டத்தினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல, இந்த அரசின் திட்டமிட்ட வஞ்சனைக்கு ஆட்பட்டவர்களுமாவர். இந்த அரசு ஏற்கனவே வாழ்க்கைச்செலவு அதிகரிப்புக்காக இரண்டுதடவைகளில் ஏனைய அரச-தனியார் துறையினருக்கு வழங்கிய சம்பள உயர்வான ரூபா 177ஐ தோட்டத் தொழிலாளர்களுக்கு அநியாயமான முறையில் மறுத்து வந்துள்ளது. இ.தொ.கா. தலைவர்கள் இப்பொழுதும் அதை அரசுடன் பேசிப் பெற்றுத்தருவதாகவே கூறி வருகிறார்கள். அதிலும் சிரிப்புக்குரிய விடயம் என்னவெனில் யூ.என்.பி. சங்கமான தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கப் பொதுக் காரியதரிசி தாம் இதற்காகப் போராடப் போவதாகவும் சூளுரைத்து வருவதேயாகும்.

சம்பள உயர்வும் ஏனைய சலுகைகள் அரசினால் அரச-தனியார் துறையினருக்கு வழங்கப்படும் போது அவற்றை தோட்டத் தொழிலாளர்களுக்கு கொடுக்க மறுப்பது அரசின் தொடர்ச்சியான நடவடிக்கை. அதேவேளை புனருத்தாரணவரி போன்ற வரிகள் அறவிடப்படும் போது அதற்குள் தோட்டத் தொழிலாளர்களையும் சேர்த்து விடுவார்கள். பாகுபாட்டிற்கும், புறக்கணிப்புக்கும் இதைவிட உதாரணம் தேவையே இல்லை. வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பால் அவதியுறும் அரசாங்க தனியார் ஊழியர்களிடம் புனருத்தாரண வரி அறவிடும் திட்டத்தைக் அரசு கைவிடவேண்டும். புனருத்தாரணத்திற்கு நிதி தேவையாக இருந்தால் அதை வன்செயல்களுக்கு காரணமானோரிடமும், அதில் ஈடு பட்டவர்களிடமும் இருந்து பெற்றுக் கொள்வதே சரியானதாகும்.

## சீனாவில் மாஓசேதுங்......

6-ம் பக்கத் தொடர்

அணுக வேண்டும். அவரது சாதனைகளுக்கு முதலிடமும் தவறுகளுக்கு இரண்டாம் இடமும் வழங்க வேண்டும். மாஓவின் சிந்தனையை விளங்கிக், தேர்ச்சிபெற்று சரியாகவும் விரிவாகவும் பிரயோகிக்க வேண்டும் என டெங் வலியுறுத்தினார். அவர் 'இரண்டு எதுவாகிலும்' என்ற கொள்கையை எதிர்த்தார். (அதாவது மாஓவின் எந்தக் கொள்கையையும், எந்த உத்தரவையும் ஏற்றுநடத்தல்) ஏனெனில் மாஓசேதுங் சிந்தனை என்பது மாஓவின் தனிப்பட்ட விருத்திமட்டுமல்ல. அது தொடர்ச்சியான அடிப்படைத் தத்துவங்களால் ஆன சித்தாந்த முறையுமாகும். மாஓவைத் தலைசிறந்த பிரதிநிதியாகக் கொண்ட சீனக் கம்யூனிஸ்டுகள் மார்க்சிசம் லெனினிசத்தை சீனாவின் நிலைமைகளுக்கு ஏற்ப விருத்தி செய்ததன் விளைவே மாசேதுங் சிந்தனையாகும்.

ஒரு குறிப்பிட்ட இடத்திலும், நேரத்திலும், நிலைமையிலும் அவர் கூறியவற்றை எல்லாச் சந்தர்ப்பத்திலும் பின் பற்றுவது அதே போல் தவறானவற்றை அப்படியே ஏற்பதும் மார்க்சிய போக்கு அல்ல.

சமீபத்தில் புகுத்தப்பட்ட புதிய கொள்கைகள் மாஓவிற்கு மாறான போக்கின் விளைவே எனச் சிலர் கூறி வருகிறார்கள். இது சரியான முடிவு அல்ல. மாஓ நீண்ட நாட்களுக்கு முன் கூறியதற்கு இணங்கவே எமது வேலைத் திட்டம் சோஷலிசத்தைக் கட்டி எழுப்பும் திசையில் திருப்பியது. சீனாவில் 1956ல் உற்பத்திக்கான உடமைகள் சோஷலிச மாற்றத்திற்கு உட்பட்டபின், முந்திய புரட்சிக் கால வர்க்கப் போராட்டம் முடிவு பெற்றதுஎன்றார். அவ்வாண்டு மாஓ அவர்கள் தலைமை தாங்கிய 8வது கட்சி மாநாட்டில் மக்களிடையே வளர்ந்துவரும் பொருட் தேவையையும் கலாச்சார நலனையும் கருத்தில் கொண்டு சமூக உற்பத்திச் சக்தியை விருத்தி செய்வதில் முழுப் பலத்தையும் செலுத்தி நாட்டை தொழில்மயமாக்கவேண்டும் என்றார். துரதிர்ஷ்டவசமாக இந்தச் சரியான கருத்து சரியானபடி முன்னெடுக்கப்படவில்லை.

சமீப காலங்களில் சீனா பின்பற்றும் பல புதிய கொள்கைகளில் பெரும்பாலானவை மாஓவினால் வகுக்கப்பட்டவையும், ஆனால் செயல்படுத்தத் தவறியவையும் ஆகும். அவர் தவறுதலாக எதிர்த்தவற்றையும், சீராக நடைமுறைப் படுத்தாதவற்றையும் இப்பொழுது நடைமுறைக்கு கொண்டுவந்துள்ளனர். இந்த வகையில் சீனக் கம்யூனிஸ்டுகள் மாஓ சேதுங் சிந்தனையை விருத்தி செய்து வருகிறார்கள். இப்பணி தொடரும் என்பது உறுதி.

''மார்க்சிச லெனினிசம் முடிவடைந்து விட்டதொன்றல்ல. அது நடைமுறைப் படுத்தப்பட்டபோது பலபுதிய வழிகள் பிறந்தபடி இருக்கின்றன'' எனமாஓ கூறியுள்ளார். மார்க்சிச லெனினிசத்தையும் மாசேதுங் சிந்தனையையும் இந்த விதத்தில்தான் சீனக் கம்யூனிஸ்ட்டுக்கள் கருதுகின்றார்கள். ★

## தேசியப் பத்திரிகைகள்

1-ம் பக்கத் தொடர்......

இவ்வாறு நடந்து கொள்கின்றன எனச் சிலர் வினவலாம். முதலாளித்துவ அரசியல் பிழைப்பிற்கு இனவாதம் உதவுவதுபோல் பத்திரிகை வியாபாரத்திற்கும் இனவாதம் அவசியப்படுகிறது. இலங்கையின் பெரும் பத்திரிகை ஸ்தாபனங்கள் பெரிய முதலாளிகளினாலேயே நடத்தப்படுகின்றன. முதலாளிகளுக்குத் தேவையானது பணமேயன்றி, தேசநலனோ, மக்கள் நலனோ அல்ல. பெரும் தொகையில் பத்திரிகை விற்பனையாகுவதன் மூலமே வருவாய் அதிகரிக்கும். எனவே பெரும்பான்மையான மக்களிடம் விற்பனையை அதிகரிக்க மிக லேசான வழி இனவாதமே. அதுவே பத்திரிகைகள் மக்களிடம் சென்றடைய உள்ள மிகக் கிட்டிய குறுக்கு வழியுமாகும். இலங்கையில் பெரு முதலாளிகள் - பாராளுமன்ற அரசியல் - பத்திரிகைகள் இவை மூன்றுக்கும் இடையேயான தொடர்புகள் பின்னிப் பிணைந்தவையே. பத்திரிகை ஜனநாயகம், பத்திரிகைச் சுதந்திரம், பத்திரிகா தருமம் என்று எவ்வளவிற்கு வாய்ப்பந்தல் இத் 'தேசியப்' பத்திரிகைகளால் போடப்பட்டாலும் அதன் சுயரூபம் சுரண்டலும், முதலாளித்துவத்தைப் பாதுகாத்தலுமேயாகும். இதற்றுக்காக அவை எந்த இனவாதச் சாக்கடையிலும் இறங்கத் தயங்கமாட்டா.

பத்திரிகைகள் தாமே அபிப்பிராயங்களை உருவாக்கி அவற்றை மக்களின் மீது திணிப்பதைத் தொழிலாகக் கொண்டுள்ளன. ஒரு மெல்வாக்கு மிக்க பத்திரிகையால் நல்ல வேலையையும் செய்ய முடியும். தீய வேலையையும் செய்யமுடியும். ஒரு முதலாளித்துவ பத்திரிகை நிறுவனத்தால் சிங்கள. தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பத்திரிகைகள் வெளியிடப்படுகின்றன. ஆனால் ஒரு பிரதான பிரச்சினையில் முதலாளித்துவ ஆளும் நலன் கருதி மூன்று பத்திரிகைகளும் மூன்றுவித அபிப்பிராயங்களை வெளியிடும் நடைமுறை நம் நாட்டுத் 'தேசியப்' பத்திரிகைகளுக்கு ஒரு பாரம்பரியமாகும். தமிழர் பிரச்சினை ஒரு தேசிய நெருக்கடியாக உள்ள இவ்வேளை இத் 'தேசியப்' பத்திரிகைகள் நியாயமான தீர்வுக்கு உதவக்கூடிய வகையில் செயல்படலாம். ஆனால் அவை அவ்வாறு செயல்படுமா என்பது சந்தேகமே. நல்லவற்றைத்தான் செய்ய முடியாது விட்டாலும் பிழையானவற்றையும், பெரிதுபடுத்தலையும், விஷமத்தனமான செய்திகளையும் மக்களுக்கு பரப்பி திணிக்காமல் இருந்தால் அதுவே போதுமானதாகும். ★

7-ம் பக்கத் தொடர்......

அவர்களது அமெரிக்க எஜமானர்களுமே என்பதை எல்லாருமே மறந்துவிட்டாற் போல் தோன்றுகின்றது.

லெபனான் குழப்பத்தை முன்னிட்டு அங்கு அரசாங்கத்தை நிலைப்படுத்த வந்ததாகச்சொன்ன அமெரிக்கா பிரேஞ்சு ராணுவ முகாங்களில் மீது பலஸ்தீன தற்கொலைப் படைப்பிரிவொன்றின் தாக்குதலால் பெரும் ராணுவப் பொருட்சேதமும் உயிர்ச் சேதமும் ஏற்பட்டுள்ளது. இது மேலும் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கும் இஸ்ரேலிய ராணுவ நடவடிக்கைக்கும் வழி கோலக்கூடிய ஒரு சூழலில் பலஸ்தீனிய விடுதலை இயக்க முகாமுக்குள் ஏற்பட்டுள்ள புதிய மோதல் மிகவும் வருந்தத்தக்கது. அந்நியத் துணையுடனான தலையீடுகள் எவ்வாறு ஒரு விடுதலை இயக்கத்தைப் பலவீனப்படுத்த முடியும் என்பதற்கு இச்சம்பவங்கள் மேலும் ஆதாரமாகின்றன.

## நீதியான சமரசத் தீர்வுக்கு...

காத்தனர். இந்த அரசின் உண்மையான தோற்றத்தைக் விரைவில் சிங்கள மக்கள் தெரிந்துகொள்வார்கள். அப்பொழுது பெருமுதலாளித்துவ பேரினவாத யூ, என். பி அரசை முறியடித்தே திருவார்கள், அந்த நிலையை உருவாக்குவதற்குத் தமிழர் பிரச்சினை ஒரு நியாயமான தீர்வுபெற வேண்டும் என விரும்புகிறார்கள். அதன் பிரதிபலிப்பை பல்வேறு அரசியல் கட்சிகளிலும் பொது ஸ்தாபனங்களிலும் காணமுடிகிறது. அதே வேளை ஒரு தீர்வுக்கான சூழ்நிலையை குழப்பும் நோக்குடன் தீவிர இனவாத சக்திகள் பகிரங்கமாகவும், திரைமறைவிலும் செயற்படுகின்றன. அத்தகைய சக்திகளுக்கு இடம்கொடாத தீர்வுக்கான சகல முயற்சிகளையும் துரிதப் படுத்துவதே அவசியமாகும்.

ஆளும் கட்சியான யூ. என். பி.க் கட்சியின் பொருளாதார அரசியல் - நோக்கங்கள் பற்றியும், எதிரேயுள்ள தமிழர் கூட்டணியின் வர்க்க அரசியல் நோக்கங்கள் பற்றியும் எமக்கு ஒரு அடிப்படையான கொள்கை நோக்கு உண்டு. நீண்டகால நோக்கிலும் அடிப்படையாகவும் இவற்றை அரசியல் ரீதியில் எவ்வாறு கையாளவேண்டும் என்பதிலும் நமக்குத் தெளிவான நிலைப்பாடு இருக்கிறது. இருந்தபோதிலும் இன்றைய தேசிய சர்வதேசிய சூழ்நிலைகளை உற்றுநோக்கும் போது தமிழர் பிரச்சினையின் தீர்வு அவசியம் என்பதையே உணர்கின்றோம்.

சமரசத்தீர்வை வலியுறுத்தும்போது அது பெயரளவிலானதொன்றாகவோ, கண்துடைப்பானதொன்றாகவோ, அமையக்கூடாது. ஏதோ மனமிரங்கிக் கொடுப்பதாகவோ, அன்றி மன்றாடிப் பெறுவதாகவோ அமையக்கூடாது. நியாயமான உரிமைகள் நீதியான பேச்சுவார்த்தைகளின் மூலம் வழங்கப்படுவதாகவே இருக்க வேண்டும். முன்நிபந்தனைகளையோ, முட்டுக்கட்டையான அம்சங்களையோ முதன்மைப்படுத்தக் கூடாது. தமிழர் கூட்டணி உட்பட சகல கட்சிகளும் கலந்து கொள்ளும் மாநாட்டில் தேசத்தினதும், சகல இனமக்களினதும் - சுதந்திரம், இறைமை தன்னாதிக்கம், நல்வாழ்வு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட மனம் திறந்த பேச்சுவார்த்தைகள் இடம் பெறவேண்டும். அதன் மூலம் ஏற்படும் சமரசமே உண்மையானதாக அமையமுடியும்.

சமரசத் தீர்வுக்கு மாநில சபைத்திட்டம் பற்றிப்பேசப் படுகின்றது. இங்கே வடக்கு கிழக்கிற்கு தனி ஒரு மாநில சபையா அல்லது இரண்டு சபைகளா என்ற விவாதம் கிளப்பி விடப்பட்டிருக்கிறது. ஒன்று இரண்டா என்பதல்ல பிரச்சினை; மாநில சபைகள் எவ்வாறு அமையப்போகின்றது என்பதே பிரச்சினையாகும். வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் முஸ்லீம் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களாகும். அப்பிரதேசங்களின் பாரம்பரிய அமைப்புமுறை சிதைக்கப்படாத விதத்திலும் - குடியேற்றம், பொருளாதார அபிவிருத்தி, நிர்வாகம், கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் திணிப்போ, பாகுபாடோ, புறக்கணிப்போ, இடம் பெறுதவகையிலும் மாநில சபையானது ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டதோ அமைவதையே மக்கள் விரும்புவார்கள். சிங்கள மக்களாயினும், தமிழ் மக்களாயினும் முஸ்லீம் மக்களாயினும் அவர்களில் எவர் ஒருவரின் அடிப்படையான உரிமைகளை மற்றொரு இனத்தவர் மறுப்பதையோ அல்லது பறிப்பதையோ அனுமதிக்காத அமைப்பு முறையை உருவாக்குவதே தமிழர் பிரச்சினையின் ஜனநாயகபூர்வமான தீர்வுக்காவது உதவக்கூடிய தொன்றாகும்.

எனவே அரசின் தலைவர்களோ, கட்சிகளின் தலைவர்களோ அல்லது பொது ஸ்தாபன, மதத்தலைவர்களோ இடத்திற்கும் நேரத்திற்கும் ஏற்றால் போல் பொறுப்பற்ற விதத்தில் பேச்சுக்களை நிகழ்த்தி தமிழர் பிரச்சினையின் தீர்வை சிக்கலாக்கித் தாமதப் படுத்தும் நடைமுறைகளில் ஈடுபடுவதை விடுத்து நீதியான சமரசத் தீர்வுக்கு முன் வருவதை துரிதப்படுத்துதல் வேண்டும். இதையே நாட்டின் சகல மக்களும் விரும்புகிறார்கள்.


செம்பதாகை
சந்தா - 1984

| | |
|---|---|
| ஒரு வருடம் | 20-00 |
| அரை வருடம் | 10-00 |
| தனிப்பிரதி | 1-50 |

(தபால் செலவு உட்பட)
அனுப்பவேண்டிய முகவரி
"செம்பதாகை"
மே/பா யாழ்ப்பாண அச்சகம்
407, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்


அச்சுப்பதிப்பு: யாழ்ப்பாண அச்சகம் 407, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் வெளியீடு சி. நவரத்தினம் 15/1 மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்.